# எதிரொலி
ஆஸ்திரேலியா

ETHIROLI

குரல் 06 அதிர்வு 63 புரட்டாதி 2022 editor@ethiroli.com தொ.பே:1800 960 162







# லேபர் ஆண்டாலும் லிபரல் ஆண்டாலும் நமக்கொரு விடிவு இல்லை!



PHOTO CREDIT : CANBERRA REFUGEE ACTION CAMPAIGN







ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்


ROYAL
INTERNATIONAL
MONEY TRANSFERS
EASY • FAST • SAFETY
நாணயமிக்க பணப்பரிமாற்றம்
'டன்டிநொங்' இல்
புதியதோர் சேவை
BOC
PEOPLE'S BANK
COMMERCIAL BANK
HNB
சம்பத் வங்கி
Sampath Bank
UNION BANK
Amãna Bank
It's Your Bank
Same day bank transfer
No One Beat Our Rate
THE HUB ARCADE
4/131-147, Walker Street, Dandenong VIC 3175
(03) 87649143
0406409403
royalinfomoney@gmail.com


KUMARAN'S Cafe
Enjoy the South Indian Favourites
IDLI | DOSA | VADA | BAJJI
A Complete Vegetarian Restaurant
Call Us For Orders
0413 306 575
RIVERDALE VILLAGE PLUS SHOPPING CENTRE
200, HUMMINGBIRD BOULEVARD, TARNEIT, VIC - 3029.


SAME DAY DELIVERY SERVICE க்கு
தங்களின் அமோக வரவேற்புக்கு
எங்களின் அன்பு நன்றிகள்
SRI KUMARAN
our local store
Whatsapp us 0421 255 557
We have now expanded our services to
CBD | POINT COOK | MANOR LAKES | WERRIBEE | TARNEIT
உங்களின் ஆதரவு! எங்களின் உத்வேகம்!!
OUR STORES
SHEPPARTON | TARNEIT | CLYDE NORTH | NARRE WARREN | CARRUM DOWNS
info@srikumaran.com.au
www.srikumaran.com.au



# இலங்கையர் என்பது அடையாளம் அல்ல அவமானம்!

ஜெரா

வெளிநாடு ஒன்றுக்கு செல்லும் இலங்கையர்கள் அங்கு தங்களை இலங்கையர்கள் என்று சொல்லிக்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது" என அண்மையில் கூறியிருந்தார் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச. உண்மையாகவே அப்படியொரு நிலைதான் உருவாகியிருக்கிறது. அதற்குப் பல காரணங்கள் உள்ளன.

இலங்கை சுதந்திரமடைந்து 75 வருடங்களை அண்மிக்கிறது. இயற்கை வளங்கள், துறைமுகங்கள், போதியளவு உள்நாட்டுப் பொருளாதாரத்தைப் பெருக்கக்கூடிய விவசாய உற்பத்தி, சுற்றுலாவிகள் விரும்பும் பண்பாட்டிடங்கள் என ஒரு சொர்க்காபுரிக்கு இருக்கவேண்டிய அத்தனை அம்சங்களையும் கொண்டதொரு நாட்டை 74 வருடங்களாக அபிவிருத்தி செய்யமுடியவில்லை. இந்த 74 வருடங்களுக்குள் வெளிநாடுகளிடம் வாங்கிய கடனை மீளச் செலுத்த முடியாத நிலைமைகள் ஐந்து தடவைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஐந்து தடவையும் சர்வதேச நாணய நிதியத்திடம் மண்டியிட்டு நிதியுதவியை இந்தநாடு பெற்றிருக்கிறது. இவ்வளவு வளங்கள் கொட்டிக்கிடந்தும் நாட்டின் வளர்ச்சிக்கும், மக்களின் நலனோம்புகைக்கும் வெளிநாட்டுக் கடன்களையே முற்றுமுழுதாக நம்பியிருக்கும் ஒரு நாட்டவர் என எப்படி இலங்கையர்கள் தம்மை அறிமுகம் செய்துகொள்வது?

இந்நிலைக்கு யார் காரணம்? இவ்வாறு அவமானகரமான பொருளாதார நிலைக்கு முற்றுமுழுதான காரணகர்த்தாக்கள் சிங்கள அரசியல்வாதிகளே தான். தமிழர்கள் மீதான இனவாதத்தை சிங்களவர்கள் மத்தியில் விதைத்து, ஆட்சியைப் பிடித்துக்கொண்ட அரசியல்வாதிகள் தம் குடும்பத்தினரின் ஏழேழு தலைமுறைக்கும் சொத்துச் சேர்த்ததைத் தவிர நாட்டுக்குப் பிரயோசனமான எதனையும் செய்யவில்லை. சிங்கள மக்களை முழுமுட்டாள்தனத்துக்குள் தள்ளி , மொத்த நாட்டையுமே சூறையாடிவிட்டனர். ஊழல், சுரண்டல், கொமிசன், சொத்துக்கையகப்படுத்தல், வெளிநாட்டுக் கடன்களில் கொள்ளை என நாட்டுக்குக் கிடைக்க வேண்டிய மொத்த வருமானத்தையும் அரசியல்வாதிகள் வழித்தெடுத்துக்கொண்டனர். இத்தகைய அரசியல்வாதிகளுக்குத் தண்டனையையோ, சொத்துப் பறிப்பையோ செய்யாமல், நாட்டின் மொத்தப் பாதுகாப்புத் துறையும் அவர்களைப் பாதுகாத்து நிற்கும் ஒரு நாட்டின் குடிமகன் என எப்படி அறிமுகம் செய்துகொள்வது?

இங்கிருக்கின்ற ஆட்சி முறைமையே அடுத்த பெரும் அவமானச் சின்னமாகும். அதிலும் ஏக அதிகாரமுடைய ஜனாதிபதிமுறைமை நாகரிகமற்ற மன்னராட்சி முறைமைகளுக்கு ஒப்பானது. உலகம் ஜனநாயக ரீதியில் எங்கேயோ வளர்ந்து நிற்கிறது. ஆனால் சக இனத்தவர் மீது வன்முறையை ஏவும் ஜனாதிபதிகளையும், ஆட்சியிலிருக்கும் வரையும், ஆட்சியை விட்டு நீங்கிய பிறகும் அவரை ஒன்றுமே செய்யமுடியாது என்கிற அதிகாரத் திமிரை அள்ளிவழங்கும் நாடாக இலங்கை இருக்கிறது. ஆட்கடத்தல், படுகொலை, ஊழல், தவறான ஒழுக்கமுடைய நிர்வாக நடத்தை என அனைத்துக்குற்றங்களையும் புரிந்த ஒருவரை மக்களின் அதிக விருப்பு வாக்கினால் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யமுடியும். அவ்வாறு ஜனாதிபதியாகியவுடன் அவர் ஏற்கனவே புரிந்த மனித குலத்துக்கு எதிரான அத்தனை குற்றங்களிலிருந்தும், அதற்காகத் தொடரப்பட்ட வழக்குகளிலிருந்தும் விடுதலையளிக்கும் நீதித்துறையுடைய ஒரு நாட்டின் குடிமகன் நான் என எவ்வாறு அறிமுகம் செய்துகொள்ள முடியும்?

மூவினங்கள் வாழும் நாடொன்றில் ஓர் இனத்துக்கு மட்டுமே அனைத்து சலுகைகளையும் அள்ளியிறைக்கும் நாடுதான் இலங்கை. ஏனைய இனத்தவரின் அரசியல் உரிமை, ஆட்சியில் பங்கெடுக்கும் உரிமை, அணிதிரண்டு ஜனநாயக முறைப்படி எதிர்ப்பைக் காட்டும் உரிமை, சுயாதீனமாக அரசை விமர்சிக்கும் உரிமை என சிவில் சமூகத்துக்குரிய எவ்வித உரிமைகளையும் ஏனைய இனங்களுக்கு விட்டுக்கொடுக்காத பௌத்த மேலாண்மை நிலவும் ஒரு நாடாகவே இலங்கை தன்னைத் தகவமைத்துக்கொண்டிருக்கிறது. இங்கிருக்கும் அரசியல் பசிக்கான தீனியே இதுவாகத்தான் இருக்கிறது. அரசின் ஒடுக்குமுறைகளுக்கு எதிராகப் போராடினால், அது பயங்கரவாதம் எனவும், அவ்வாறு போராடுபவர்களை பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் ஆயுளுக்கும் சிறையிலடைக்கும் அளவுக்குப் பழிவாங்கல்கள் ஒரு கலாசாரமாக ஊறியிருக்கும் நாடாக இலங்கை உருமாறியிருக்கிறது. இதே கலாசாரம் இலங்கையில் மாத்திரமல்லாது, சிங்களவர்கள் புலம்பெயர்ந்திருக்கும் நாடுகள் வரை கொஞ்சமும் வெட்கமின்றிப் பரவியிருக்கிறது. அவர்கள் பரவியிருக்கும் நாடுகளின் ஜனநாயக வெளியைக் கொஞ்சமாவது கற்றிருந்தால், லண்டனில் போராட்டம் நடத்திய தமிழ்ப் போராட்டக்காரர்களின் கழுத்தை அறுப்பேன் என இலங்கையின் தூதரக அதிகாரி சைகை காட்டும் நிலை உருவாகியிருக்காது. 'GoHomeGota' என அவுஸ்திரேலியாவில் போராடிய சிங்களவர்கள் மத்தியில், அதே கோட்டாபய புரிந்த தமிழ் இனப்படுகொலை குறித்த துண்டுப்பிரசுரத்தை விநியோகிக்க சென்றவர்களைத் தூசித்துத் துரத்தும் நிலை உருவாகியிருக்காது. இலங்கையில் அரசு மட்டுமல்ல அதனை நிர்வகிக்கும் மக்களும் ஒருவிதமான சக இன வெறுப்பு நோயினால் பாதிக்கப்பட்டு நீண்டகாலம் ஆகிவிட்டது. எத்தேசம் போனாலும் அந்நோய் அவர்களை விட்டு வெளியேற முடியாதிருக்கிறது. இவ்வாறானதொரு மனிதகுல விரோதத் தேசத்தவர் என்பதை எப்படி ஒரு தேசிய அடையாளமாக ஏனைய நாட்டவரிடம் முன்வைப்பது?

2009 ஆம் ஆண்டில் உலகின் கண் முன்னேதான் இலங்கை அரசும், அதன் படைகளும் தமிழர்களுக்கு எதிரான மிகப்பெரிய இனப்படுகொலையை நிகழ்த்தி முடித்தன. போரின் முடிவில் சிறைபிடிக்கப்பட்டவர்களை மனிதகுலமே வெட்கித் தலைகுனியும் வண்ணம் கோரமான சித்திரவதைகள் புரிந்து கொன்று குவித்தன இலங்கை அரசின் படைகள். வெள்ளைக்கொடியுடன் வந்து சரணடைந்தவர்களை சுட்டுக்கொன்றனர். மதத்தலைவர்களுடன் சென்று சரணடைந்தவர்களையும், உறவுகளால் இராணுவத்திடம் கையளிக்கப்பட்டவர்களையும் காணாமலாக்கினர்.

அவமானகரமான பொருளாதார நிலைக்கு முற்றுமுழுதான காரணகர்த்தாக்கள் சிங்கள அரசியல்வாதிகளே தான். தமிழர்கள் மீதான இனவாதத்தை சிங்களவர்கள் மத்தியில் விதைத்து, ஆட்சியைப் பிடித்துக்கொண்ட அரசியல்வாதிகள் தம் குடும்பத்தினரின் ஏழேழு தலைமுறைக்கும் சொத்துச் சேர்த்ததைத் தவிர நாட்டுக்குப் பிரயோசனமான எதனையும் செய்யவில்லை. சிங்கள மக்களை முழுமுட்டாள்தனத்துக்குள் தள்ளி, மொத்த நாட்டையுமே சூறையாடிவிட்டனர்.

தமிழ் இளைஞர்களை எவ்வித இரக்கமும் காட்டாது வெள்ளைவான்களில் கடத்திக் காணாமலாக்கினர். இவையனைத்துக்கும் பொறுப்புச் சொல்லவேண்டிய அரசு எவ்வித அக்கறையும் காட்டாமல் தட்டிக்கழித்தது. மனிதவுரிமைகள், மனிதநேயம் என எதனையும் கவனிக்காத அரசு சர்வதேசம் கோரும் அனைத்துப் பொறுப்புக்கூறல்களுக்கும் சாக்குப்போக்குகளையே கூறிவந்திருக்கிறது. இந்த நவீன பேரண்டத்தில் எங்குமே கண்டிராத சித்திரவதைகளின் தாயகமாக அறிமுகமாகியிருக்கும் இலங்கை, மானுட விழுமியங்கள் எதனையும் மதிக்காத நாடு. அதற்கான தண்டனைகளைக்கூட வழங்காத நாடு. இந்தக் கொடூரங்களால் பாதிக்கப்பட்டவர்கள் குற்றாவாளிகளைக் கையுமெய்யுமாகப் பிடித்துக்கொடுத்தால் கூட ஜனாதிபதி பொதுமன்னிப்பளித்து அவர்களை அனைத்துக்குற்றங்களிலிருந்தும் விடுவிக்குமளவுக்குத்தான் இந்நாட்டின் நீதித்துறை சீரழிந்து கிடக்கிறது. இவ்வாறானதொரு சித்திரவதைகளின் கூடாரமாகிய நாடொன்றிலிருந்து நான் வருகிறேன் என எந்த முகத்தோடு ஏனையவர் முன்னிலையில் அறிமுகமாகிக் கொள்வது?

இத்தனைத் துயரங்களையும் தமிழர்களுக்கு ஏற்படுத்திவிட்டு அதற்காக மன்னிப்பையோ, மனவருத்ததையோ தெரிவிக்காத ஒரு நாடாக இலங்கை மாத்திரமே இந்தப்பூகோள வரைபடத்தில் இருக்கமுடியும். அதேபோல இவ்வளவுக்குப் பிறகும் தொடர்ந்தும் நில அபகரிப்பையும், தமிழ்ப் பண்பாட்டழிப்பையும், வழிபாட்டு உரிமை மறுப்பையும் ஓர் அரசு மேற்கொள்கிறதெனில் அது எவ்வளவு குரூரமான மனநிலையோடு இயங்குகிறது? இத்தகையதோர் அரசினால் ஆளப்பட்டவன், அந்த அரசு தந்த இலவசக் கல்வியினால் அறிவைப் பெற்றவன் என எவ்விதத்தில் மற்றையவர்களிடம் அறிமுகம் செய்துகொள்வது?

எனவேதான் இலங்கையர் என்பது அடையாளம் அல்ல. அவமானம். ஆனால் இந்த அவமான உணர்ச்சி விமல் வீரவன்ச போன்றர்களுக்கு வந்திருப்பதுதான் விந்தையானது. ஏனெனில் சிங்கள மக்களை மந்தையாக்கியதில் பெரும்பங்கு அவரையே சாரும்.


ISODIA TAX
ACCOUNTING AND TAX
QUALIFIED TAX AGENTS
TAX PRACTITIONERS BOARD REGISTERED
CHARTERED ACCOUNTANTS AUSTRALIA + NEW ZEALAND
எங்கள் சேவைகள்
வருமான வரி தாக்கல்
வணிக வரி (BAS) தாக்கல்
வணிக எண்ணை (ABN) அமைத்தல்
சுயமாக நிர்வகிக்கப்படும் வருங்கால கருணைத்தொகை உதவி
(Setting up Self Managed Super Funds)
வரி கணக்கை தாக்கல் செய்ய
$99
மட்டுமே
மேலும் விவரங்களுக்கு அழைக்கவும் !
03 8772 2557 | 0421 279 530 (DAN)
isodia.tax@gmail.com
THE HUB ARCADE, SUITE 4 SHOP 7 / 131 – 147 Walker St, Dandenong VIC 3175


PRAKAHS
GOLD BUYERS
தங்கம் ஈடு வைக்கும் நிலையம்
உங்கள் அவசரப்பணத்தேவைக்கு உடனடித் தீர்வு!
வட்டி விகிதம் 3%
தங்கம் வாங்கும் இடம்
டனிஸ்டன் 0421 279 530
127 Walker St, Dandenong, VIC-3175.
prakahsgold@gmail.com
www.prakahsgold.com
/PrakahsGold
MON- SAT 10 AM - 5:30 PM
CLOSED SUNDAYS AND PUBLIC HOLIDAYS

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI

குரல்:06 அதிர்வு: 63 புரட்டாதி 2022 தொ.பே:1800 960 162

# போர்வாளால் வெங்காயம் வெட்டலாமா?

'டயஸ்பொறா' என்று சொல்லின் முதன்மைச் சொந்தக்காரர்கள் யூதர்கள் தான். தங்கள் தேசக்கனவை ஆயிரக்கணக்கான வருடங்களாக மானசீகமாகச் சுமந்தபடி, ஒருதுண்டு நிலமும் சொந்தமாக இல்லாத ஏதிலிகளாக யூதர்கள் உலகெங்கும் அலைந்தபோது அவர்கள் 'டயஸ்பொறா' என்றழைக்கப்பட்டார்கள். இப்படி புலம்பெயர்ந்த, ஏதிலியான, தேசமே இல்லாத ஒரு இனம் உலகெங்கும் தன் கால்களை அகலப் பதித்தது. குறிப்பாக உலகப்பொருளாதாரத்தை தீர்மானிக்கும் சக்தியாக விஸ்வரூபமெடுத்தது. அதைவிடவும் என்னென்ன துறைகள் எல்லாம் உலகை ஆட்டிப்படைக்க உதவுமோ அந்தத்துறைகளில் எல்லாம் யூதர்கள் உள்நுழைந்து, தம்மை உலகின் தவிர்க்கமுடியாத சக்தியாக மாற்றிக்கொண்டார்கள். விளைவு? இஸ்ரேல் என்ற தேசம் அவர்களுக்கு கிடைத்தது.

இப்போது அதே 'டயஸ்பொறா' என்ற சொல்லின் சொந்தக்காரர்கள், புலம்பெயர்ந்திருக்கும் நம்மைப் போன்ற ஈழத்தமிழர்கள் தான். எமக்கும் இப்போதும் ஒரு தேசமில்லை. ஆனாலும் எங்கள் மனதுக்குள் தமிழ்த்தேசக் கனவு புதைந்தேயிருக்கிறது. எப்படி யூதர்கள் தாம் புலம்பெயர்ந்து போயிருந்த நாடுகளில், தீர்மானிக்கும் சக்தியாக உருவெடுத்திருந்தார்களோ அதேபோன்று தான் ஈழத்தமிழர்களும் தாங்கள் புலம்பெயர்ந்து வசிக்கும் நாடுகளின்'தீர்மானிக்கும் சக்திகளாக' மாற்றமடைந்து வருகின்றனர். பொருளாதார ரீதியாக ஈழத் தமிழர்கள் ஆஸ்திரேலியா தொடக்கம் அமெரிக்கா வரை கொடிகட்டிப் பறக்கிறார்கள். அதேபோன்று நாடாளுமன்ற உறுப்பினர்களாக, மாநகரசபை மேயர்களாக, அமைச்சர்களாக ஈழத்தமிழர்கள் புலம்பெயர் தேசங்களின் அரசியலில் உள்நுழைந்திருக்கிறார்கள். இவற்றைவிட அறிவியல், மருத்துவம், பொறியியல் என்று பிற துறைகளிலும் புலம்பெயர் ஈழத்தமிழர்களின் ஆதிக்கம் தொடரவே செய்கின்றது.

ஏறக்குறைய, யூதர்களைப் போல உலக ஒழுங்கைத் தீர்மானிக்கும் சக்தியாக மாறிக்கொண்டிருக்கும் ஈழத்தமிழர்கள், தமது சக்திக்கேற்ற காரியங்களைச் செய்வதைவிடுத்து உப்புச்சப்பற்ற வேலைகளில் ஈடுபடுவது எவ்வளவு பெரிய மடத்தனம்? எம்முடைய நிலையில் இருந்தபோதுதான் யூதர்கள் அமெரிக்காவின் துணையோடு இஸ்ரேலை அமைத்தார்கள். ஆனால் நாமென்ன செய்கின்றோம்? கோயில் கும்பாபிசேகத்துக்கு புலம்பெயர்ந்திருக்கும் நாடுகளின் அரசுகளிடம் உண்டியல் குலுக்குகின்றோம். தீபாவளிப்பண்டிகைக்கு அந்த நாடுகளின் தலைவர்களை வேட்டி அல்லது சேலையோடு அழைத்து வந்து, 'ஜென்ம சாங்கல்பம்' அடைந்துவிட்டதாக கொண்டாடி மகிழ்கிறோம். ஒப்பற்ற ஒரு போர்வாளை, வெங்காயம் வெட்டப் பயன்படுத்துவது போல, தங்கள் சக்தியின் மகிமைக்குப் பொருந்தாத சிறுமைத்தனமான வேலைகளை மட்டும் மிகச்சரியாகச் செய்யும் நாம், என்ன செய்யவேண்டுமோ அதையும் மிகச்சரியாகவே தவறவிடுகின்றோம்.

ஆஸ்திரேலியா உள்ளிட்ட புலம்பெயர் தேசங்களில், அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், சமூக மதிப்பிலும் உன்னதநிலையைக் கொண்டிருக்கும் புலம்பெயர் ஈழத்தவர்கள், இலங்கையில் நடந்த போர்க்குற்றங்களுக்கான விசாரணை, காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி, நில ஆக்கிரமிப்பு, சுய நிர்ணய உரிமை போன்றவற்றுக்காக தாங்கள் தற்போது இருக்கும் நாடுகள் மூலம் அழுத்தம் கொடுக்கும் வகையிலான காரியங்களை முன்னெடுத்திருக்க வேண்டும். ஏனெனில் சகல நாடுகளின் தலைவர்களையும் அணுகும் ஆற்றலும் தகுதியும் புலம்பெயர் ஈழத்தமிழர்கள் பலரிடம் உண்டு. அப்படிப்பட்ட செல்வாக்கை , எமது தாயக மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான அழுத்தத்தை உண்டாக்குவதற்கு ஏன் புலம்பெயரிகள் தயங்குகின்றனர்? அதற்கு மிகமுக்கியமான காரணங்களாக சரியான தொலைநோக்குத் திட்டங்களின்மை, புலம்பெயரிகளிடம் கூட்டுச்செயற்பாடுகளுக்கான முன்னெடுப்புகளின்மை என்பவற்றைக் குறிப்பிடலாம்.

அதிலும் ஒவ்வொரு நாடுகளிலும் புலம்பெயர் ஈழத்தமிழர்களுக்கென்று தனித்தனி அமைப்புகள் இருக்கின்றன. அது நல்லதுதான். ஆனால் தாயகத்தில் இன்னும் எரிந்து கொண்டிருக்கும் பிரச்சினையைத் தீர்க்க , இந்தப் புலம்பெயர் தேசங்களில் இருக்கும் அமைப்புகள் எல்லாம் ஓரணியில் திரண்டால், அது இன்னும் வலுவோடு நாடுகளின் அரசுகளை அணுகி, அவர்களை எங்களுக்கானவர்களாக மாற்ற உதவும். அடம்பன் கொடியும் திரண்டால் தானே மிடுக்கு. திரளாவிட்டால், சாதாரண கொடியாகக் கடந்துபோய்விடுவார்கள். எம்மிடையேயுள்ள இந்த ஒன்றுபடாமையைப் பயன்படுத்தவே இலங்கையின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, புலம்பெயர் தமிழ் அமைப்புகள் சிலவற்றின் தடையை நீக்கி, அவற்றை தனக்கு வாலாட்டும் அமைப்புகளாக மாற்ற எத்தனிக்கின்றார். உதிரிகளாக புலம்பெயர் தேசங்களில் தமிழர்கள் அமைப்புகள் செயற்படுவதால், ரணிலின் நரித்தனம் சிலவேளைகளில் கைகொடுக்கவும் கூடும். எனவே, பேரினவாதத்தின் பொறிக்குள் சிக்கிக் கொள்வதைத் தவிர்க்கவும், எங்கள் தாயக மக்களின் இன்னல்களை விரைவில் தீர்க்கவும், புலம்பெயர் தமிழ் அமைப்புகள், ஒரே எண்ண அலைவரிசையில் செயற்படுவதும், ஒரே அணியாகத் திரள்வதும் காலத்தின் கட்டாயம்.




# ஆஸி அரசின் ஓசி விளம்பரதாரர்கள்!

ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்தேர்தலில் வெற்றி பெற்ற லேபர் கட்சி ஆட்சிக்கு வந்து நூறு நாள்கள் உருண்டுவிட்டன. ஆனால் இன்னமும் ஆஸ்திரேலியா புத்துயிர் பெறவில்லை. பொருளாதாரப் பின்னடைவு, வாழ்க்கை செலவு அதிகரிப்பு போன்றவற்றோடு போராடிக்கொண்டிருக்கும் அதே சமயத்தில் முன்னைய அரசங்கத்தின் தவறான நடவடிக்கைகளை சரி செய்யவேண்டிய கட்டாயத்திலும் இருக்கின்றது லேபர் அரசு.

விண்ணைத் தொடும் பணவீக்கம், உயர்ந்துகொண்டே செல்லும் வட்டி வீதம், வாழ்க்கை செலவினத்துக்கேற்ப ஊதிய உயர்வின்மை, தொழிலாளர் பற்றாக்குறை போன்றவற்றை சரிசெய்வதில் எவ்வளவு தூரம் லேபர் அரசு முனைப்பு காட்டுகிறது என்பதும் கேள்விக்குறியாகவே உள்ளது. அதேவேளை, குறிப்பிடத்தக்க சில அரசியல் வெற்றிகளையை லேபர் அரசாங்கம் அடைந்திருப்பதையும் பதிவுசெய்தேயாக வேண்டும். முன்னைய லிபரல் அரசின் காலத்தில், ஆஸ்திரேலியாவுக்கும் பிரான்ஸுக்கும் இடையே எழுந்த கசப்புணர்வு, சொலமன் தீவுப் பிரச்சினை போன்றவற்றைத் தீர்ப்பதில் லேபர் அரசின் அரசியல் நகர்வுகள் வெற்றியளித்துள்ளன என்று அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

அதேவேளை தேர்தல் வாக்குறுதிகளில் அகதிகளுக்கான தற்காலிக பாதுகாப்பு விசா, நிரந்தர பாதுகாப்பு விசாவாக மாற்றப்படும் என்று, அகதிகள் விடயத்தில் கரிசனை காட்டிய லேபர் அரசு, இப்போது அதைப்பற்றி வாயை இறுகமூடி, கள்ளமௌனம் காக்கின்றது. அதேவேளை படகுவழியாக ஆஸ்திரேலியாவுக்குள் நுழைவோரை - குறிப்பாக இலங்கை ஏதிலிகளை ஆஸியின் கடலோரக் கண்காணிப்புப்படையினர், வந்தவழியே இழுத்து சென்று இலங்கை அதிகாரிகளிடம் ஒப்படைக்கும் செய்திகளும் அடிக்கடி வரத்தொடங்கியிருக்கின்றன.

'ஆபத்தான படகுவழிப் பயணத்தை மேற்கொள்ளாதீர்', 'ஆஸ்திரேலியாவுக்கு படகு வழியே வந்தால் அனுமதிக்கப்பட மாட்டீர்கள்' என்ற வாசகங்களடக்கிய விளம்பரங்களை இலங்கையின் உள்நாட்டுப் பத்திரிகைகள் முதல் யூரியூப் வரை காணக்கூடியதாக இருக்கின்றது. அப்படிக் காசைக் கரியாக்கியேனும், அகதிகளின் ஆஸிக்கான உள்நுழைவை தடுத்துவிடவேண்டுமென்று லேபர் அரசு கங்கணம் கட்டிக்கொண்டு கருமமாற்றுகின்றது.

இப்படிப்பட்ட நிலையில்தான், தற்போது லேபர் அரசு தனக்கான புதிய விளம்பரதாரர்களை கண்டுபிடித்துள்ளது. அவர்கள் வேறுயாருமல்லர். ஆஸ்திரேலியத் தமிழ்ச் சமூகத்தின் தலைமைகள் என்று தங்களைத் தாங்களே தம்பட்டம் அடித்துக்கொள்ளும் சிலர்தான் 'ஆஸியின் அகதிகளுக்கு எதிரான புதிய விளம்பரத்தூதுவர்கள்'. இந்தத் தமிழ் சமூகத் தலைமையை(?) சேர்ந்த சிலரோடு, ஆஸ்திரேலிய எல்லைப்பாதுகாப்பு பிரிவினரும் குடிவரவுத்துறையை சேர்ந்தோரும் அடிக்கடி சந்தித்து கலந்துரையாடுகின்றனர்.

"நீங்கள் உங்களுடன் தொடர்பில் உள்ளவர்கள் மூலம், இலங்கையில் இருந்து படகுவழியே அகதிகளாக வர ஆயத்தமாக உள்ளவர்களோடு உரையாடி, அவர்களுக்கு 'ஆஸ்திரேலியாவில் சட்டம் மாறவில்லை. படகில் வந்தால் திருப்பி அனுப்பிவிடுவார்கள்' என்று அறிவுரை செய்யுங்கள். அத்தோடு மனஸ், நவறு தீவு தடுப்பு முகாம்களை பற்றியும் சொல்லுங்கள். அப்போதுதான் அவர்களுக்கு பயம் ஏற்படும். அப்படியும் அகதிகளாக வர விரும்பினால், படகு மூலம் வராமல், சட்டபூர்வமான, நேர்வழியில் வரச் சொல்லுங்கள்" என்று தமிழ் சமூகத்தலைமைகள் என்று சொல்லப்படுவோரின் 'மண்டையைக் கழுவும்' வேலையை ஆஸி. அதிகாரிகள் செய்கிறார்கள். அப்படி மூளைச்சலைவை செய்யப்பட்டதால், ஆஸி அதிகாரிகள் சொன்னதற்கெல்லாம் தலையாட்டியதோடு, 'எல்லா ஊடகங்களும் எங்கட கையிலதான். எல்லாவற்றையும் வடிவாச் செய்யலாம்' என்றும் பீற்றிவிட்டு வந்திருக்கிறார்கள். அத்தோடு நில்லாமல், இந்தச் சந்திப்புகள் பற்றிய படங்கள், பதிவுகளையும் தமது சமூக வலைத்தளக் கணக்குகளில் தெறிக்கவிடுகின்றனர். தமக்குத் தெரிந்த சிலருக்கு போன் பண்ணி," ஆஸிக்கு படகில் வருவது பெரும் பாவச்செயல்" என்பது போல உபதேசிக்கவும் தொடங்கி விட்டனர்.

உயிர் அச்சுறுத்தல் காரணமாக அகதியாக அந்தரித்து வருபவர்கள், இலங்கையில் உள்ள ஆஸ்திரேலியத் தூதரகத்துக்கு போய் விஸாவை எடுப்பதென்பது அவ்வளவு லேசுப்பட்ட காரியமா? அப்படி எடுக்க முடியாது என்பதால் தானே லட்சக்கணக்கில் காசு போனாலும் பரவாயில்லையென்று உயிரைப் பணயம் வைத்து படகுமூலம் அவர்கள் ஆஸ்திரேலியாவுக்கு வருகின்றனர். அவ்வாறெனின், ஆஸி அதிகாரிகள் சொல்லும் நேர்வழி எது? மலேசியா, இந்தோனேசியா போன்ற நாடுகளில் ஐ.நா.வால் அகதிகள் என அங்கீகரிக்கப்பட்டவர்கள் கூட பத்துவருடங்களுக்கு மேலாக அந்தநாடுகளில் நிர்க்கதியாகத்தான் உள்ளனர். அங்கும் வாழ முடியாமல் போகும் போது, அவர்கள் படகுவழி பயணத்தைத் தான் இறுதிவழியாகத் தெரிவு செய்யவேண்டியிருக்கிறது.

அகதிகள் வரும் வழியை அவர்கள்தான் தேர்ந்தெடுக்க முடியும். எந்தவழி தமக்கு இலகுவானது என எண்ணுகிறார்களோ அந்தவழி அவர்களுக்குத்தானே தெரியும். விமானத்தில் வருபவர்கள் தான் அகதிகள், படகில் வருபவர்கள் சட்டவிரோதக் குடியேறிகள் என்று ஏன் ஓரவஞ்சனை காட்டுகின்றது ஆஸி. அரசு?

இதுவரை காலமும், இலங்கையில் இருந்து படகுமூலம் அகதிகளின் வருகையைத் தடுக்க, இலங்கை அரசாங்கத்துக்கும், அங்குள்ள ஊடகங்களில் வெளிவரும் விளம்பரங்களுக்கும் காசை அள்ளியிறைத்தது ஆஸ்திரேலியா. இப்போதோ, ஐந்துசதம் கூட செலவழிக்காமல் , ஆஸியில் உள்ள தமிழ் சமூகத் தலைமைகளை தனக்கான 'ஓசி (இலவச) விளம்பரத்தூதர்களாக' மாற்றியதும் லேபர் அரசின் வெற்றிதானே?



# முற்றிலும் கோணலாகிய மேதகு-II

சினிமா உலகப் பொதுமொழி. காட்சிகளின் வழியே கதையைச் சொல்ல நவீன உலகம் கண்டுபிடித்த சக்திமிக்க ஊடகம். இதன் மூலம் சொல்லப்படும் கதை பார்ப்பவர் மனதை மாற்றத்தக்கது. உலக மக்களிடத்தில் நிரந்தரமான மாற்றங்கள் பலவற்றை சினிமா ஏற்படுத்தியிருக்கிறது. அதனால்தான் மிகநேர்த்தியான கதைசொல்லல் கலையாக சினிமாவை இன்னமும் தக்கவைத்திருக்கின்றனர். அது வளர மேலும்மேலும் வலுச்சேர்க்கின்றனர். இவ்வாறான வலுவானதொரு ஊடகத்தை ஈழத்தமிழர் சரியாகக் கற்றுக்கொள்ளவும், பயன்படுத்தவும் தவறியதன் விளைவுதான், அவர்கள் எதிர்கொள்ளும் பல விடயங்களை உலகின் முன் கொண்டுசெல்லமுடியாமைக்குப் பிரதான காரணம் ஆகும்.

தமிழீழ விடுதலைப் புலிகள், சினிமாவின் கனதியை உணர்ந்து சில படங்களை வெளியிட்டிருக்கிறார்கள். திரைப்படங்களைத் தயாரிக்கவும் வெளியிடவும் நிதர்சனம், தமிழீழ திரைப்பட வெளியீட்டுப் பிரிவு போன்ற கட்டமைப்புக்களை புலிகள் உருவாக்கியிருந்தனர். அதன் ஊடாக, போராட்டக் கருத்துக்களையும், போராளிகளின் தியாகங்களையும், இன விடுதலையின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்திய பல முழுநீளத் திரைப்படங்களையும், குறும்படங்களையும் வெளியிட்டனர். மிகச் சொற்பளவிலான சினிமாசார் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நேர்த்திமிகு படங்களைத் தயாரித்துமிருந்தனர்.

புலிகள் களத்திலிருந்து மௌனித்த பின்னர், ஈழத்தவருக்கான சினிமாவும் மௌனித்துவிட்டது. அதன் பின்னர் பலரும் ஈழ சினிமா அடையாளத்துக்காகப் போராடிய போதிலும் உரிய இலக்கை அடைய முடியவில்லை. காரணம் சினிமா தொழில்நுட்பமும், கதை சொல்லும் முறைமைகளும், திரைக்கதை அமைப்புக்களும் அசுர வளர்ச்சி கண்டுவிட்ட இன்றைய நிலையில், ஈழத்தமிழர்கள் அந்த அறிவை வளர்த்துக்கொள்ளப் பின்நிற்கின்றமைதான். இந்த அசுர வளர்ச்சியைத் தனக்குள் எடுத்துக்கொண்டு தமிழக சினிமா அல்லது தமிழ் சினிமா பெருவளர்ச்சி கண்டுவிட்டது. அந்த சினிமாவின் பார்வையாளர்களாக ஈழத்தமிழர்களும் உள்வாங்கப்பட்டுவிட்டதால், சினிமா ரசனையும் தமிழக - ஈழ நிலங்களில் ஒன்றாகிவிட்டது. ஆழ் மனதுள் ஒன்றுகலந்துவிட்டது. எனவே 'இயக்கப் படங்களை' தாண்டி வெளிவரும் அனைத்துப் படங்களும் தமிழகப் படங்களைப் போன்றிருக்க வேண்டும் என்கிற ரசனை உணர்வை ஈழத்தமிழர்கள் கைக்கொண்டிருக்கின்றனர்.

எனவே தான் ஈழத் தமிழர்களை மையப்படுத்திய கதைகளைக் கூட தமிழக சினிமாவுக்குள்ளால் கொண்டுவந்தால் அது 'பெரிய எடுப்பாக' இருக்கும் என ஈழத் தமிழ் சினிமா முயற்சியாளர்கள் நம்புகின்றனர். தமிழக சினிமா பெற்றிருக்கும் தொழில்நுட்ப வளர்ச்சியையும், திரை மொழியையும் பயன்படுத்தி நமது கதைகளைச் சொன்னால் அது உலகளவில் கவனிப்பைப் பெறும் என நம்புகிறார்கள். ஆனால் அது வெறும் கற்பனையாக முடிந்துவிடும் என்பதற்கு எடுத்துக்காட்டக, ஈழத்தவரின் கதைகளைத் தாங்கிய பல தமிழகப் படங்கள் சான்றுகளாக இருக்கின்றன. அதற்கு மிகப் பிந்திய ஆதாரமாக இருக்கிறது 'மேதகு 2' எனும் திரைப்படம்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் மேதகு. வே.பிரபாகரன் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை திரைப்படமாக்கும் முயற்சியில் இரண்டாவது பாகமாக வெளியாகியிருக்கும் இத்திரைப்படம் வெகுவான எதிர்பார்ப்பை ஈழத்தமிழர்கள் மத்தியில் ஏற்படுத்தியிருந்தது. அதற்குக் காரணம் இப்படத்தின் முதல் அத்தியாயம் ஏற்படுத்தியிருந்த தாக்கம்தான். ஈழத்தமிழர் நம்பக்கூடிய - கடந்த கால வாழ்க்கையோடு நன்கு பழக்கப்பட்ட சில சம்பவங்களோடு தலைவரின் கதை சொல்லப்பட்டதால் அதில் ஒரு சுவாரசியம் இருந்தது. முதல் பாகத்தில் தலைவரது வாழ்க்கையின் ஆரம்ப கட்டத்தினைப் படமாக்கியிருந்ததால் அதில் பெரிதாகக் குறைகள் தெரியவில்லை. ஆனால் மேதகு படத்தின் இரண்டாம் பாகம் எடுத்துக்கொண்ட தலைவரது வாழ்க்கையின் பாகங்கள் அப்படியானவை அல்ல.

ஈழத்தில் 1990 ஆம் ஆண்டுக்குப் பிறகு பிறந்த பெரும்பாலானவர்கள் நேரடியாக அறிந்த - வாசித்துணர்ந்த - வீட்டில் சொல்லக் கேட்ட தலைவரதும், இயக்கத்தினதும் (தமிழீழ விடுதலைப் புலிகள்) வாழ்க்கை வரலாற்றுச் சம்பவங்களை அடிப்படையாக வைத்தே இரண்டாம் பாகம் எடுக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சம்பவங்களை ஆரம்ப கால யதார்த்தவாத மேடை நாடகத்தை காணொலியாக்கித் தொகுத்ததைப் போல திரைக்கதை எழுதப்பட்டிருக்கின்றமைதான் படத்தோடு ஒன்றிப்பதற்குத் தடையாக இருக்கிறது. 'சொல் அல்ல செயலே முதன்மையானது' என்பதை தன் வாழ்வோடு வரித்துக்கொண்ட தலைவர், திரையில் பக்கம் பக்கமாக வசனம் பேசிக்கொண்டிருக்கிறார். படத்தில் பேசிய அளவிற்குத் தலைவர் தன் நிஜவாழ்வில் கூட அவ்வளவு வசனங்களைப் பேசியிருக்கமாட்டார். தலைவரின் போராட்ட வரலாற்றில் இடம்பெற்ற முக்கியமான சம்பவங்களில் சிலவற்றை மட்டும் தேர்ந்தெடுத்து, அதனை மீள சம்பவமாக எடுத்துத் தொகுத்து, திரைப்படமாக வெளியிட்டிருக்கின்றமை மாத்திரமே இங்கு இடம்பெற்றிருக்கிறது.

அதுவும் முழுமையாகவோ, தமிழீழ விடுதலைப் புலிகளின் வரலாற்றை - ஈழத்தமிழரின் ஆயுதப் போராட்ட வரலாற்றை அறிந்திராத தரப்பினருக்குப் புரியும்படியாகவோ 'டீட்டைலாக' எதுவும் இல்லை. படத்தில் புலிகள் ஏன் ஆயுதமேந்தினார்கள் என்பதற்கான காரணங்களோ அல்லது ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கனகரட்ணம், அல்பிரட் துரையப்பா, பஸ்தியாம்பிள்ளை ஆகிய மூன்று பேர் மீதான துப்பாக்கிச் சூடுகளும் ஏன் நடத்தப்பட்டன என்பதற்கான விளக்கங்களோ கடைசி வரையும் சொல்லப்படவுமில்லை, காட்சியாகக் காட்டப்படவுமில்லை. ஆயுதங்களைத் தம் உடமையில் வைத்திராத சிவிலியன்கள் மூவரைப் பிரபாகரன் சுட்டுக்கொல்கிறார் என்பதையே இந்தக்காட்சியின் வழியில் செய்தியாக சொல்லியிருக்கிறார் இயக்குநர். புலிகளின் வரலாற்றைத் தெரிந்திராத ஒருவர் அந்தக் காட்சிகளை அப்படித்தான் எடுத்துக்கொள்வார். வரலாற்றுச் சம்பவங்களைக் காட்ட ஈழநாடு பத்திரிகைத் துண்டுகளைக் காட்சியாகக் காட்டுவதற்கு மினக்கெட்ட நேரத்துக்கு, அந்தச் சம்பவங்களோடு தொடர்புபட்ட ஒரு சிலரையாவது சந்தித்து உரையாடியிருந்தால் திரைக்கதையே வேறு திசையில் பயணித்திருக்கும்.


படத்தின் ஆரம்பக் காட்சிகளில் தஞ்சாவூரில் உள்ள முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் மையத்திற்குள் நுழையும் தமிழகப் பல்கலைக்கழக மாணவர்கள், 'பஞ்சம் பிழைக்க போன இடத்தில் நாடு கேட்டுப் போராடலாமா?' என நாசரை நோக்கி கேள்வி கேட்கின்றனர். அந்தக் கேள்விக்குக் கூட சரியாகப் பதில் சொல்ல முடியாமலேயே இயக்குநர் திணறியிருக்கிறார். தலைவரின் வரலாற்றைக் குழப்பியடித்துத் திரைக்குக் கொண்டுவந்திருக்கிறார்.

இந்தத் திரைப்படத்தில் பல காட்சிகள் ஏற்கனவே வெளிவந்த புகைப்படங்களில் இருந்து உருவாக்கப்பட்டிருக்கின்றன. உதாரணத்திற்கு தலைவர் - எம்.ஜி.ஆர் சந்திப்பு பளிச்சென மனதில் ஒட்டிக்கொள்கிறது. ஆனால் அந்தப் "பளிச்' இற்குப் பின்னாலான கதைகள் எதுவுமில்லை. அது ஒரு சம்பவம் என்றளவோடு பார்வையாளனை நிறுத்திவைத்துக்கொள்கிறது.

இப்படியாக ஈழத்தமிழரின் வாழ்விலிருந்து பிரித்துப் பார்க்கமுடியாத ஆன்மாவாக இணைந்துவிட்ட தலைவரையும் அவரினால் முன்னெடுக்கப்பட்ட ஆயுதப் போராட்ட வரலாற்றில் இடம்பெற்ற சில சம்பவங்களையும் தொகுத்துத் திரைப்படமாக்கும் முயற்சி பல கோணல்களோடு முடிந்திருக்கிறது. முதல் பாகம் சரியாக இருந்தும் இரண்டாம் பாகம் இவ்வாறு கோணல்மாணலாகியமைக்கு முழுப்பொறுப்பையும் இயக்குநரும், அவரோடு இணைந்து திரையாக்க முயற்சிகளில் ஈடுபட்டவர்களும் தான் ஏற்கவேண்டும்.

உண்மையில் தலைவரின் வரலாற்றைத் தமிழக சினிமாவின் வணிகத் தன்மைகளுக்குள்ளும், கட்டுப்பாடுகளுக்குள்ளும் நின்று ஒரு திரைப்படமாகக் கொண்டுவர இயலாது. தன் மொத்த வாழ்க்கையையும் இன விடுதலைக்காக, வரித்துக்கொண்ட கொள்கைக்காக விட்டுக்கொடுத்த அவரின் வாழ்க்கையில் ஒவ்வொரு நிமிடமும் கனதிமிக்கது. தலைவரது வாழ்க்கையில் ஒரு நிமிடம் போதும் ஒரு முழுநீள சினிமா எடுப்பதற்கு. அப்படியான ஒருவரின் வாழ்க்கையை, அவரின் வாழ்க்கை முறையின் வழியே படமாக்க ஈழத்தமிழர்களால் மட்டும்தான் முடியும். தமிழக சினிமா வைத்திருக்கும் மசாலாத்தனங்களுக்குள்ளும், அதீத கற்பனாத்திறன்களுக்குள்ளும் தலைவரின் வாழ்க்கையைக் காட்டமுடியாது. எனவே ஈழத்தமிழர்கள் சினிமாவை கற்பதன் வழியேதான் அதனைச் செய்யமுடியும். ■





# ரணில்: அப்போது அம்பி இப்போது அந்நியன்!

● ஆர்.சனத்

இலங்கையில் மட்டுமல்ல சர்வதேசத் தளத்திலும் சிறந்த ஜனநாயகத் தலைவராகக் கருதப்பட்ட ரணில் விக்கிரமசிங்கவின் கைகளுக்குள் 'நிறைவேற்று அதிகாரம்' சென்றதும், அவரும் படிப்படியாக 'சர்வாதிகார' தலைவராக உருவெடுத்து வருகின்றார் என்ற விமர்சனம் மேலோங்கியுள்ளது. இவ்வாறு எழும் விமர்சனங்களை நிராகரிக்க முடியாத வகையிலேயே அவரின் செயற்பாடுகளும் அமைந்துள்ளன.

ஆட்சி அதிகாரம் தனக்கு கிடைப்பதற்கு முன்னர் ஜனநாயகத் துதிபாடி, நல்லாட்சி எனும் காவடியைத் தோளில் சுமந்து வீதி வலம் வந்த ரணில் விக்கிரமசிங்க, அரியணையேறிய பின்னர் 'அடக்கி ஆளும்' அஸ்திரத்தைக் கையிலெடுத்துள்ளார். ஜனநாயகத்தின் 'பக்தராக' காட்சிதந்த அவர், தற்போது 'முழு சந்திரமுகி'யாக மாறிவிட்டார் என ரணிலுக்காக ஆலவட்டம் பிடித்த சிலரே விளாசித் தள்ள துவங்கியுள்ளனர். அந்தளவுக்கு ரணிலின் பயணம் தடம் மாறியுள்ளது.

மக்களின் தன்னெழுச்சிப் போராட்டத்தைப் பாதுகாப்பேன் என அறிவிப்பு விடுத்து - அதற்காக குழுவொன்றைக்கூட அமைத்து, பிரதமராக பதவியேற்ற கையோடு அதிரடி காட்டிய ரணில், ஜனாதிபதியாகத் தெரிவான பின்பு, அதே போராட்டக்காரர்களை படைகளை ஏவிவிட்டு அடித்து விரட்டினார். அறவழிப் போராட்டம், பாசிசவாதம் என போராட்டக்காரர்களை தனக்கே உரிய பாணியில் பிளவுபடுத்தி, கைது வேட்டையையும் கட்டவிழ்த்துவிட்டார். அது இன்னமும் ஓயவில்லை. போராடியவர்கள் ஏதோவொரு விதத்தில் கைது செய்யப்பட்டுகொண்டே இருக்கின்றனர்.

ஜனாதிபதியாகத் தன்னை தெரிவு செய்து, வாக்களித்த மொட்டு கட்சி உறுப்பினர்களின் அழுத்தத்தால்தான் போராட்டக்காரர்களை அடித்து கலைக்க ரணில் ஆணையிட்டார் என ரணிலின் சகாக்கள் இப்போது புதிய தொரு 'விஞ்ஞான விளக்கத்தை' சொல்லத்தொடங்கியுள்ளனர்.

போராட்டக்களத்தில் இருந்த ஐக்கிய தேசியக்கட்சிக்கு சார்பானவர்களுக்கு பதவிகள் வழங்கப்பட்டுள்ளன. ஏனையோர் வஞ்சிக்கப்பட்டுவருகின்றனர். இப்படியான இரட்டை அணுகுமுறையானது ஜனநாயகத்தில் எந்த 'டிசைனை சாரும் என்பதை கண்டறிய ஜனாதிபதி ஆணைக்குழுதான் அமைக்க வேண்டிவரும்போலும்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை அறிமுகப்படுத்தியது ஐக்கிய தேசியக்கட்சிதான் என்ற போதிலும் - அந்தச்சட்டம் நீக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தவர்தான் ரணில் விக்கிரமசிங்க. நல்லாட்சியின்போது இது தொடர்பில் அவர் வெளிப்படையாக அறிவித்துவந்தார். அவ்வளவு ஏன், கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்து, அவசரகால சட்டத்தை கையிலெடுத்தபோதுகூட அதற்கு எதிராக போர்க்கொடி தூக்கியவரும் இதே ரணில் தான். ஆனால் இன்று நிறைவேற்று அதிகார ஜனாதிபதியான பின்னர், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை தீவிரமாக அவரே செயற்படுத்தி வருகின்றார். ஜனநாயகம்தான் ரணிலின் கொள்கையெனில், வன்முறைகளில் ஈடுபட்ட போராட்டக்காரர்கள் மீது பயங்கரவாதத் தடைச்சட்டத்தை ஏன் ஏவினார்? ஜனநாயகத்தைவிடவும் தனக்கு ஆட்சி அதிகாரம் முக்கியம் என்பதை அவர் ஏறத்தாழ உறுதிப்படுத்திவிட்டார். அதிகாரப் பசிக்கு ஜனநாயகம் சோறு போடாது என்பதை அவர் மறைமுகமாக உணர்த்தி, இலங்கை அரசியல் கலாசாரம் மாறாது என, 'சிஸ்டம் சேஞ்ச்' வேண்டுமெனப் போராடியவர்களின் நம்பிக்கையைத் தகர்த்துள்ளார். கோட்டாபயவின் ஆட்சியில் அம்பியாக இருந்த ரணில் இப்போது அந்நியனாக மாறி, ஜனநாயகத்தின் பேரால் நாட்டில் அதகளம் செய்துகொண்டிருக்கிறார்.

> **கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்து, அவசரகால சட்டத்தை கையிலெடுத்தபோதுகூட அதற்கு எதிராக போர்க்கொடி தூக்கியவரும் இதே ரணில் தான். ஆனால் இன்று நிறைவேற்று அதிகார ஜனாதிபதியான பின்னர், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை தீவிரமாக அவரே செயற்படுத்தி வருகின்றார். ஜனநாயகம்தான் ரணிலின் கொள்கையெனில், வன்முறைகளில் ஈடுபட்ட போராட்டக்காரர்கள் மீது பயங்கரவாதத் தடைச்சட்டத்தை ஏன் ஏவினார்?**

ஜோசப் ஸ்டாலின் போன்ற தொழிற்சங்கத் தலைவர்களைக் கைது செய்தால் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை இல்லாமல் போகும் என ராஜபக்ச ஆட்சியின்போது அபாயச் சங்கு ஊதிய அதே ரணில் விக்கிரமசிங்க, தான் ஜனாதிபதி கதிரையில் அமர்ந்திருந்தபோதுதான் ஜோசப் ஸ்டாலினைக் கைது செய்தார். அன்று ஜி.எஸ்.பி. பிளஸ் குறித்து கரிசணை கொண்ட ரணில், இன்று மௌனம் காத்ததேனோ? இதுவும் அரசியல் இராஜதந்திரமா? இப்போதுமட்டும் ஜி.எஸ்.பி. வரிச்சலுகைக்கு ஆபத்து வராதா?

நல்லாட்சிக் காலத்தின் போது தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக பூர்வாங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அந்தக் கைதிகளின் பெயர்ப்பட்டியல் ரணிலிடமும் உள்ளது. தற்போது ரணில் நினைத்தால் ஒரே நாளில் அனைத்து தமிழ் அரசியல் கைதிகளையும் விடுவித்துவிடலாம். தன்னிடம் அதிகாரம் இல்லாதபோது அக்கறை காட்டிய அவர், இன்று அதிகாரம் கைவசம் இருக்கும்போது அதனைப் பயன்படுத்த ஆயிரம் தடவைகள் சிந்திக்கிறார். ரஞ்சனுக்காக திறந்த ரணிலின் கருணைக்கதவு, தமிழ் அரசியல் கைதிகளுக்காக உடனே திறக்க மறுப்பது ஏன்? அதுதான் குள்ளநரி அரசியல். ரணிலுக்காக வாக்களித்த விக்னேஸ்வரன் போன்ற அரசியல்வாதிகள் இதற்கு கூறப்போகும் பதில்தான் என்ன?

தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்பது ரணிலின் நிலைப்பாடு. ஆனால் தமிழர் எதிர்பார்க்கும் தீர்வை வழங்க வேண்டும் என்பதில் அவர் உறுதியாக இல்லை. இது சம்பந்தமாக ஜனாதிபதி என்ற வகையில் தமிழ்பேசும் கட்சிகளுடன் அவர் பேச்சு நடத்தலாம். ஆனால் செயல்வடிவம் என்பது தற்போதைய சூழ்நிலையில் கேள்விக்குறியே!

ரணிலின் அரசியல் பயணத்தின் உயிர்நாடி மொட்டுக் கட்சியின் வசமே உள்ளது. அந்தக்கட்சி அரசியல் தீர்வை விரும்பாது. தமிழர்களுக்கு தீர்வை விடவும் தீனிதான் முக்கியம் எனக்கூறும் நபர்களே அந்தக்கட்சியில் முக்கியஸ்தர்களாக இருக்கின்றனர். மொட்டுக் கட்சியின் ஆசி இல்லாமல் ரணிலால் நகர முடியாது. ஆக இந்த நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் முடியும்வரை அரசியல் தீர்வு என்பது சாத்தியமற்ற விடயமாகவே இருக்கப்போகின்றது.

இப்படியான சூழ்நிலையில்தான் புலம்பெயர் தமிழர்களிடம் கையேந்தியுள்ளது அரசு. தலைக்கு மேல் வெள்ளம் வந்த பிறகு, தப்பிப்பதற்கு ஓடம் தேடுவதுபோல, அவசர அவசரமாக சில புலம்பெயர் தமிழ் அமைப்புகள் மற்றும் தனிநபர்கள்மீதான தடைகள் நீக்கப்பட்டுள்ளன. இந்த நகர்வுகூட சுயநல அரசியலின் வெளிப்பாடாகும்.

வடக்கில் படைக் குறைப்புக்கு தயாரில்லை, காணிகளை முழுமையாக விடுவிக்கவும் மனமில்லை, தமிழ் அரசியல் கைதிகளுக்கும் விடுதலை இல்லை. இப்படி தமிழர்களுக்காக இலகுவில் செய்யக்கூடிய விடயங்களைக்கூட செய்யாமல், நல்லிணக்கம் பற்றி பேசுவதும், நேசக்கரம் நீட்டுவதுபோல நடிப்பதிலும் பயன் இல்லை. இலங்கையில் தமிழர்கள் வாழலாம், ஆனால் நாங்கள்மட்டும்தான் ஆள்வோம் என தமிழர்களை காலில் மிதித்துக்கொண்டு, புலம்பெயர் தமிழர்களிடம் சிங்களப் பேரினவாத ரணில் அரசு உதவி கோருவது எந்த வகையில் நியாயம்? ■




கார்த்திக்வேலு

# ஆஸியெங்கும் இனி மின்சாரக் கார் யுகமே!

ஆஸ்திரேலியா வளர்ந்த முன்னணி நாடுகளின் பட்டியலில் இடம் பெற்றிருந்தாலும், இங்கு விற்கப்படும் கார்களின் விலை ஒப்பீட்டளவில் அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளை விடவும் அதிகமாகவே இருந்து வந்திருக்கிறது. ஆஸி சந்தை அமெரிக்காவை விடச் சிறியது என்பதும் , அந்த வாகனங்கள் எதுவும் இங்கு உற்பத்தி செய்யப்படுவது இல்லை என்பதுவும், பிற நாடுகளில் இருந்து கடல்வழியேதான் அவை தருவிக்கப்பட வேண்டும் என்பதும் இதற்கு முக்கியமான காரணங்கள்.

உள்நாட்டில் கார் உற்பத்தி பெரும் தடுமாற்றத்துடனேயே இடம்பெற்றுவந்தது. கார் உற்பத்தியாளர்களுக்கு அரசு பெருமளவில் நிதிச்சலுகைகளை அளித்தும், இந்தத் தொழிலை ஆஸியில் வெற்றிகரமாக மேற்கொள்ள முடியவில்லை. அடிலெய்டில் 2017 இல் உருவாக்கப்பட்ட சிவப்பு வண்ண ஹோல்டன் கமடோர் தான் ஆஸி யில் உற்பத்தியான கடைசிக் கார். தற்சமயம் ஆஸியில் விற்பனையாகும் எல்லாக் கார்களுமே வெளிநாட்டில் தயாராகி வருபவையே .

இந்தச் சூழலில் சமீபத்தில் கேள்விப்பட்ட இன்னொரு செய்தி ஆச்சரியத்தை வரவழைத்தது . வளர்ந்த நாடுகளில் ஆஸி மற்றும் ரஷ்யாவில் மட்டுமே கார்களுக்கு Fuel Efficiency Standards எனப்படும் ‘எரிபொருள் திறன் தரநிலை’ பரிசோதிக்கப்படுவதில்லை. சில வருடங்களுக்கு முன்னர் ஐரோப்பாவில் ’வோல்ஸ்வாகன்’ நிறுவனம் கிட்டத்தட்ட 85 லட்சம் கார்களை திரும்பப் பெற்றுக்கொள்ள (Recall) வேண்டிய சூழல் உருவானது பலருக்கு நினைவிருக்கலாம். எரிபொருள் திறன் குறித்த ஐரோப்பிய தரநிலைகளை அந்தக் கார்கள் எட்ட முடியாமல் போனதே இந்தத் திரும்பப்பெறலுக்கான காரணம் . ஐரோப்பிய வாகன மாசு உமிழ்வு (Emission) சட்டங்கள் மிகக் கடுமையானவை .

தற்போது இருக்கு ஆஸி சட்டங்களின்படி, ஐரோப்பாவில் சட்டப்படி விற்கமுடியாத கார்களை ஆஸ்திரேலியாவில் தடையின்றி விற்கலாம் . அதாவது உலகெங்கிலும் உள்ள கார் உற்பத்தியாளர்கள் வளர்ந்த நாடுகளில் விற்க முடியாத பல எரிபொருள் திறன் குறைந்த கார்களை ஆஸியில் தள்ளிவிடும் சூழல் நிலவி வந்தது. இந்த வழக்கத்தை நிறுத்தும் பொருட்டு சமீபத்தில் ஆட்சிக்கு வந்த லேபர் அரசு இப்படி ஒரு தரநிலையை ஆஸியில் கட்டாயமாக்குவது குறித்து ஆலோசித்து வருகிறது.

ஆஸி வெளியிடும் புவிவெப்பமூட்டும் வாயுக்களில் 10% கார்களில் இருந்தே வெளியாகின்றன. எனவே இப்படி ஒரு சட்டம் கொண்டு வருவது மின்சாரத்தில் இயங்கும் கார்களை ஆஸி வாடிக்கையாளர்கள் வாங்கும் வாய்ப்பை அதிகமாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது . தற்சமயம் ஆஸி யில் விற்கப்படும் புதிய கார்களில் 2% மட்டுமே மின்சாரக் கார்களாக இருக்கின்றன . சர்வதேச அளவில் விற்பனையாகும் மின்சாரக் கார்களின் சதவிகிதத்தை விடவும், இது ஐந்து மடங்கு குறைவாகும் . ஐரோப்பாதான் இதில் இன்னும் முன்னிலையில் உள்ளது . அங்கு தற்சமயம் விற்கப்படும் கார்களில் நாலில் ஒரு பங்கு, மின்சாரக் கார்களே. மேலும் ஐரோப்பிய ஒன்றியம் 2035 ஆம் ஆண்டளவில் ஒட்டுமொத்தமாக பெற்றோல் மற்றும் டீசல் என்பவற்றில் இயங்கும் கார்களைத் தடைசெய்ய எண்ணியுள்ளது.

லேபர் கட்சியின் தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்றாக இந்த எரிபொருள் திறன் நிர்ணயம் இருந்தமை குறிப்பிடத்தக்கது . ஆனால் மின்சாரக் கார் பயன்பாட்டை அதிகரிக்க இந்த நடவடிக்கை மட்டுமே போதாது என்பதை ஆஸி அரசு உணரவேண்டும். மின்சாரக் கார்கள், எரிபொருளில் இயங்கும் கார்களை விட விலை அதிக மானவை . அத்தோடு ஆஸி போன்ற பெரிய நிலப்பரப்பை கொண்ட நாட்டில் மின்சாரக் கார்களை இயக்க ஏராளமான மின்னேற்று நிலையங்கள் ( charging stations) பரவலாக நிறுவப்பட வேண்டும். நம் கைபேசி பயன்பாட்டுக்கு கைபேசி கோபுரங்கள் எவ்வளவு இன்றியமையாதவையோ, அதுபோலவே மின்சாரக் கார்களின் தங்கு தடையற்ற பயன்பாட்டுக்கு , பரவலான மின்னேற்று நிலையங்கள் அவசியம்.

ஆஸி அரசு ஒரு கொள்கை முடிவாக இவ்வகை மின்னேற்று நிலையங்களை கூட்டாக பிற தனியார் நிறுவனங்களின் ஒத்துழைப்போடு நிறுவ முன்வர வேண்டும். அமெரிக்கா அரசு இதே போன்ற ஒரு அணுகுமுறையைக் கைகொண்டிருப்பதை நாம் ஒரு உந்துதலாகக் கொள்ளலாம். அமெரிக்க அதிபர் பைடன், அமெரிக்காவில் அரசு சார்பாக 2030 ஆம் ஆண்டுக்குள் மொத்தம் ஐந்து லட்சம் மின்னேற்ற நிலையங்களை நிறுவவிருப்பதாக உறுதி அளித்திருக்கிறார். இந்தத் திட்டத்தின் படி ஒவ்வொரு ஐம்பது மைல் தொலைவுக்கும் ஒரு மின்னேற்ற நிலையம் அமைய வேண்டும் என்ற குறிக்கோள் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு நிகராக ஆஸியிலும் அரசு இவ்வசதிகளை உருவாக்க முன்வர வேண்டும் . ஆஸி அரசு சார்பாக வெறும் 400 மின்னேற்ற நிலையங்களுக்கே இதுவரை ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது , இந்த எண்ணிக்கையை அதிகரிப்பது தொடர்பில் பரிசீலிக்க வேண்டும்.

மின்சாரக் கார் பயன்பாட்டை அதிகரிக்க மற்றுமொரு முக்கியமான வழி , இவ்வகைக் கார்களை வாங்குவோருக்கு அரசு அளிக்கும் பொருளாதார ஊக்கத்தொகைகளும் சலுகைகளும் தான். இவை தற்சமயம் மாநில அளவிலேயே அளிக்கப்படுகின்றன. ஒவ்வொரு மாநிலமும் ஒவ்வொரு விதமான சலுகைகளை அளிக்கிறது. உதாரணமாக நியூ சவுத் வேல்ஸ் $3000 ஊக்கத்தொகையும், ஸ்டாம்ப் டியூட்டி தள்ளுபடியும் அளிக்கிறது. விக்டோரிய மாநிலம் $3000 ஊக்கத்தொகையும், சாலை வரிகளில் சில தள்ளுபடிகளையும் அளிக்கிறது . கான்பரா வேறு விதமான சலுகைகளை அளிக்கிறது , மின்சாரக் கார் வாங்க $15,000 வட்டியில்லாத கடன் வழங்குகிறது.

இப்படி ஒவ்வொரு மாநிலமும் ஒவ்வொருவகை சலுகைகளாக அளிக்காமல் அரசின் ஒத்துழைப்போடு, இவைகளை தேசிய அளவில் ஒரே வகைச் சலுகையாக எளிமையாக்க வேண்டும் . மேலும் இவ்வகை வாகனங்களில் பயன்படுத்தப்படும் மின்கலன்களை (batteries) ஆஸியிலேயே உற்பத்தி செய்யப் பெரும் வாய்ப்பு உள்ளது. மின்கலன் மற்றும் கார் உற்பத்தியாளர்களை இவ்வகை மின்கலன் உற்பத்தி செய்யும் வகைகளில் அரசு ஊக்குவிக்க வேண்டும்.

கடந்த இரண்டு வருடங்களாக ஏற்பட்ட கோவிட் முடக்கம், அது தொடர்பான விநியோகச் சங்கிலி (Supply Chain ) அறுபடல்கள், மின்கலனுக்கு தேவையான முக்கியமான மூலப்பொருளான லித்தியம் விலையேற்றம் என்று பல்வேறு விஷயங்கள் மின்சாரக்கார் உற்பத்தியில் சிறு சுணக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. ஆனால் இந்தச் சுணக்கம் தற்காலிகமானதே. இன்னும் ஓரிரண்டு ஆண்டுகளில் மின்சாரக் கார்களின் உற்பத்தியும் பயன்பாடும் கோவிட்டுக்கு முன்பிருந்த வளர்ச்சி வேகத்தை எட்டும் என்று வல்லுநர்கள் கணிக்கின்றனர்.

‘சோலர் பனல்களின்’ மூலம் மின்சாரம் தயாரிப்பதில் ஆஸி முதன்மையான இடத்தைப் பிடித்திருக்கிறது. அந்தத் திட்டத்துக்கு அரசு செய்த செலவு இன்று நேர்மறையாக நமது பொருளாதாரத்திலும் மின்சார உற்பத்தியிலும் பிரதிபலிக்கிறது. ஆனாலும் புவி வெப்பமடைதலை நிவர்த்தி செய்யும் முயற்சிகளில் ஆஸி பிற வளர்ந்த நாடுகளை எட்டிப்பிடிக்க இன்னும் நிறையவே செய்யவேண்டியுள்ளது. அதன் தொடக்கமாக மின்சாரக் கார் பயன்பாட்டை ஊக்குவிக்கும் இவ்வகைச் செயற்திட்டங்கள் நல்ல ஆரம்பமாக இருக்கும் என்று நம்புவோம்.

# Sai Shree Foods Pty. Ltd.

## AUSTRALIA - CANADA - INDIA

# REMARKABLE QUALITY AND RELISHING TASTE.




If you're after the authentic taste of Indian style foods look no further, Sai Shree Foods is the manufacturer of quality Indian Yoghurt, Idli & Dosa mix, Paneer, Shrikhand Kesar Elaichi, Mango Lassi, Punjabi Lassi and much much more. Sai Shree Foods produce a Quality Australian Products in Melbourne facility.

We are also distributing Grand snacks/pickles and Mambalam Iyers pickles (Famous South Indian brand)

**HEAD OFFICE:** Sai Shree Foods Pty. Ltd.
Ph: 03 9706 6211
Unit 17/69-77, Mark Anthony Drive, Dandenong - VIC 3175

**DISTRIBUTORS:** Sai Shree International Pty Ltd
Sydney & Canberra - Mr Bhaskar - 0421 835 554
Products Available - Adelaide, Perth, Brisbane & Darwin

# IMFஉம் இலங்கையும்

# பின்னணியில் சீனாவும் இந்தியாவும் பொருளாதாரப் பொறிநிலை!



A.R.V.லோஷன்

அண்மையில் இலங்கைக்கும் இலங்கையருக்கும் கிடைத்த ஒரு ஆறுதலான, மகிழ்ச்சியான செய்தி, சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு வழங்கச் சம்மதித்துள்ள 2.9 பில்லியன் டொலர் தான்.

கடன் என்ற அதலபாதாலத்துக்குள் வீழ்ந்துள்ள இலங்கைக்கு அதிலிருந்து முதற்கட்டமாகக் கொஞ்சமேனும் மீண்டு ஆசுவாசப்படுத்திக்கொள்ள , அவசரமாக 3 பில்லியன் டொலர் தேவைப்பட்டது. அதில் 99.9 வீதம் இப்போது கிடைக்கிறது.

பணியாளர் மட்ட ஒப்பந்தம், நான்கு ஆண்டு கால விரிவாக்கப்பட்ட - நீட்டிக்கப்பட்ட கடன் வசதியின் படி - போன்ற வார்த்தை ஜாலங்களை சாமானிய மக்களால் இலகுவாகப் புரிந்துகொள்ள முடியாவிடினும் - கடன் தொகையை மீளச் செலுத்த முடியாதிருந்த வங்குரோத்து நிலையிலிருந்து ஓரளவாவது மீண்டெழுந்து, நம் நாட்டை நம்பிக் கடன் வழங்கக்கூடியளவுக்கு சர்வதேச நாணய நிதியத்தை இலங்கை கொண்டுவந்துள்ளதே ஒரு பெரிய வெற்றிதான்.

ஆனால் பல மட்டக் கலந்துரையாடல்கள், சில நிபந்தனைகள், கடன் வழங்கிய நாடுகளின் உத்தரவாதம் என்று பல தடைகளை இலங்கை இன்னமும் தாண்டவேண்டியிருந்திருக்கிறது. IMF என்றழைக்கப்படும் சர்வதேச நாணய நிதியமும் இரக்கப்பட்டு, “இந்தா வைத்துக்கொள்” என்று அள்ளிக்கொடுத்துவிடவில்லை. இலங்கை ஏற்கனவே பட்ட கடன்களினைச் செலுத்த முடியாதிருக்கும் நிலையில், மேலும் வாங்கும் பில்லியன்களைச் செலுத்த முடியாது போனால் என்ன நடக்கும் என்பதை ஊகித்து, மூன்று முக்கியமான கடன் வழங்குநர்களின் உறுதிப்பாட்டை அறிந்தே, நீட்டிக்கப்பட்ட காலம் என்ற முடிவை நாணய நிதியம் எடுத்துள்ளது.

அதுவும் இன்னமும் நிறைவேற்று மட்ட அனுமதி இல்லை. அதிலும் இலங்கை வந்த குழுவின் தலைவர் அழுத்தமாகச் சொன்ன ஒரு விடயம் - ”பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு அடி-கோலுதல், அதிக பாதிப்புக்குள்ளாகும் பொதுமக்களைக் காப்பாற்றுவதைக் கடமையாகவும் கொண்டு அரசாங்கம் செயற்படல், கடன் மீளச்செலுத்துகையின் வெளிப்படைத்தன்மை ஆகியவற்றுடன் கடன் வழங்கும் நாடுகள் இலங்கைக்கு வழங்கும் உத்தரவாதம் போன்றவற்றின் அடிப்படையிலேயே இனி வரும் காலத்தில் இந்தத் தொகைக்கு மேலதிகமாக இலங்கைக்கு ஏனைய நாடுகளின் உதவிகள் பற்றி தீர்மானிக்கப்படும்.”என்பதுதான்.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுக-ளின் பட்டியல் இப்போது ஐ.நா. சபையின் அங்கத்துவ நாடுகளின் பட்டியலுக்கே சவால் விடுமளவுக்கு நீண்டு கொண்டு செல்கிறது.

பங்களாதேஷிடம் கூட இலங்கை கடன் கேட்பதையும், அந்தநாடு உலருணவு உதவிகளை வழங்குவதையும் அவதானிக்கிறோம்.

ஆனால் இலங்கைக்கு கடன் வழங்கும் நாடுகளில் மூன்று நாடுகள் பிரதானமானவை. அண்மைக் காலங்களில் இலங்கைக்கான உதவிகளை வழங்கியுள்ள இந்த மூன்று நாடுகளுக்கிடையேயான ராஜதந்திர உறவுகள் அவ்வளவு உவப்பானவையாக இல்லாதுவிடினும் இலங்கை என்ற மையப்புள்ளியில் இணைந்திருக்கும் இவை, எதிர்காலத்தில் இலங்கை சம்பந்தமான விடயங்களில் ஒருங்கிணைந்து செயற்படவேண்டியிருக்கும்.

இந்தியா, சீனா, ஜப்பான் என்ற மூன்றுமே இப்போது இலங்கைக்கான உதவிகளை வழங்கும் முன்னணி நாடுகளாக சர்வதேச நாணய நிதியத்திடமும் தொடர்பில் இருக்கப் போகின்றன.

மனமளவில் ஒத்துவாழாத தம்பதி தம் பிள்ளைக்காக இணங்கி வாழ்வது போலத் தான் இவற்றின் நிலையும்.

சர்வதேச நாணய நிதியத்தின் அறிவிப்புக்குப் பின்னர் ஜப்பான் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் ஒன்றுக்கு அழைக்க, சீனா அதற்கு உடனடியாக இணங்க, இந்தியா மறுபக்கத்தில் இலங்கைக்கான உதவிக் கோரிக்கைகளைத் தன் நட்பு நாடுக-ளிடம் முன்வைக்க, அது இலங்கைக்கு இப்போதைக்கு நம்பிக்கையுடன் கூடிய மகிழ்ச்சியான விடயம் தான்.

ஆனால் உலகம் முழுவதும் பிரபலமாகியிருக்கும் ‘சீனாவின் கடன்பொறி’ போல நாமும் சிக்கிவிடுவோமா என்ற இயல்பான அச்சம் இலங்கையர் எல்லோருக்கும் உள்ளது.

காரணம், மற்ற நாடுகள், அமைப்புக்களை விடவும் சீனா என்ற தனிநாட்டிடம் தான் இலங்கை அதிகமாகக் கடன் பட்டிருக்கிறது.

சந்தைப்படுத்தல், விற்பனை, சந்தை, மூலதனக் கடன்களாக இலங்கை பெற்றுள்ளவை தவிர, இலங்கையின் மொத்தக் கடன்படு தொகையில் 16 வீதத்தை சீனாவே வழங்கியிருக்கின்றது.

ஆசிய அபிவிருத்தி வங்கியே இதற்கு அடுத்தது தான்.

ஜப்பானிடம் 10 வீதம், இந்தியா 4 வீதம், உலக வங்கி 9 வீதம் என ஏனைய கடன் வழங்குநர்கள் எல்லாமே சீனாவுக்கும் பின்னால் தான் .

இதற்கெல்லாம் பின்னர் தான் அமெரிக்காவோ, பிரித்தானியாவோ அல்லது ஆஸ்திரேலியாவோ இருக்கின்றன.

இவற்றில் ஜப்பான், இந்தியா போன்ற நாடுகளின் உதவிகள் பெறப்பட்ட விதம் வெளிப்படையானவை. அத்தோடு இவற்றின் கட்டுமானப் பணிகளில் பங்களிப்பு இருந்தாலும், பிற்காலத்தில் சொத்துடைமையாக்கப்படும் திட்டத்தோடு அவை முன்னெடுக்கப்படாமல் இருப்பதை பொருளாதார, அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர். சீனாவின் முதலீட்டிலும், நேரடி, மறைமுக கட்டுப்பாட்டிலும் உருவாகியுள்ள கொழும்பு துறைமுக நகரமும் அம்பாந்தோட்டை துறைமுகமும் சீனாவின் கொலனிகளாகவே தெரிகின்றன. இடையிடையே சீனாவின் ஆதிக்கமும் இலங்கை அரசியலில் அண்மைக்காலத்தில் தாக்கம் செலுத்தியதைக் கண்டும் இருக்கிறோம்.

பூகோள ரீதியாகவும், கலாசார ரீதியாகவும் இந்தியாவோடு நெருக்கமான இலங்கைக்கு, சீனாவின் உளவுக்கப்பல் ஏற்படுத்திய நெருக்கடி அனைவருக்கும் தெரியும். இப்படியான சீனாவின் முயற்சிகளைத் தடுக்க வேண்டுமென்றால், இலங்கையைத் தள்ளி வைக்காமல், விலகி நின்று எச்சரிக்கையுடன் அவதானிக்காமல், அருகே இழுத்து அரவணைத்து ஆதரவளிப்பதே சிறந்த உபாயம் என்பதை இந்தியா உணர்ந்துள்ளது. அதனால் தான் இலங்கைக்கு கேட்காமலேயே இந்தியா 4 பில்லியன் டொலர் கடனையும், அதிகமான மனிதாபிமான நிவாரண உதவிகளையும் செய்தது.

இது மட்டுமன்றி இந்தியத் தூதரகமும் முன்னைய யுத்த காலத்தில், இலங்கையின் அன்றாட அரசியல், முக்கியமான நகர்வுகளில் காட்டிய உன்னிப்பான அவதானிப்பை இப்போதும் காட்ட ஆரம்பித்திருக்கிறது. கொழும்பைவிட இந்தியாவுக்கு சமீபமானதும், இந்தியாவின் பிராந்தியப் பாதுகாப்புக்கு ஆபத்தானதுமானதாகக் கருதப்படும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாண விவகாரங்களில் (பாதுகாப்பைத் தாண்டி பொருளாதாரம், முதலீட்டு ஒத்துழைப்பு என்று) இந்தியா தனது இருப்பை விட சீனாவின் தலையீடு இல்லாமலிருப்பதை உறுதிசெய்கின்றது.

ஜனாதிபதியாகப் பதவியை ஏற்றவுடன் நிகழ்த்திய முதல் உரையிலேயே, ஜனாதி-பதி ரணில் விக்கிரமசிங்க இலங்கையின் பூகோள அமைவிடம், அதை முன்னிறுத்தி இலங்கை அடையக்கூடிய முக்கியத்துவம் என்று குறிப்பிட்டது இயல்பாகவே சாணக்கியமும் சர்வதேச ரீதியில் அதிக தொடர்புகளையும் கொண்ட ரணில் எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை ஓரளவு கோடி காட்டியிருந்தன.

இலங்கைக்கான உதவிகளைப் பல்வேறு வகையில் வழங்கிக்கொண்டேயிருந்தாலும் வெளிப்படையாக அதைக் காட்டியிராத ஜப்பான் (கோத்தாபய ஆட்சிக்காலத்தில் நிராகரிக்கப்பட்ட நிலத்தடி ரயில்வே திட்டம் தவிர) இப்போது கூட்டங்களை ஒழுங்கமைப்பதில் முன்னிற்பதானது, ஜனாதிபதி ரணில் தன் சாமர்த்தியத்தால் இந்த மூன்று நாடுகளுக்கிடையே ஏற்படுத்திய போட்டியின் மூலம், இலங்கைக்கான உதவிகள் பெருகுவதற்காக எடுத்த உபாயம் எனக் கருதப்படுகிறது.

இதன்மூலம் தனியொரு நாட்டில் தங்கியிராமை உறுதிப்படுத்தப்படுவதுடன், இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பும் கிடைப்பது உறுதியாகும். சீனா இடையிடையே முரண்டு பிடித்தாலும் சர்வதேசத்தின் பார்வை வட்டத்துக்குள் தான் சீனாவின் தலையீடுகள் இருக்கும்.

எனினும் 50 பில்லியனைத் தாண்டியுள்ள கொடுகடன் தொகையை, வரலாற்றில் முதற்தடவையாக கடனை மீளச் செலுத்துவது முடியாது என உத்தியோகபூர்வ அறிவிப்பை வெளியிட்ட இலங்கை, அதிலிருந்து மீள்வதற்கு இவை மட்டுமே போதாது.

இதனால்தான் கடன் மீளளிப்புக்கும், பொருளாதார உறுதிநிலைக்கும் சர்வதேச நாணய நிதியம் வழங்கிய ஆலோசனைக-ளின் படி வரி அதிகரிப்புக்கள், விலை, கட்டண ஏற்றங்கள் என்று மக்கள் தலையில் சுமைகளை ஏற்றிவைத்துள்ளது அரசாங்கம். வெளிநாட்டு நாணயக் கையிருப்பை பெருக்கிக்கொள்ளும் வழிமுறையை சரியாகக் கண்டறிவதோடு, அதன் மூலமாகக் கடனைச் செலுத்துவது அவசியம். இப்போதைய நிதி நெருக்கடியிலிருந்து மீள்வதாயின் இன்னும் கடனை (அண்மையில் கோத்தாபயவின் ஆட்சியில் இலங்கை வாங்கிய கடனைத் திருப்பி வழங்க, இன்னொரு கடன் பெற்ற கொடுமையும் நடந்திருக்கிறது) மேலதி-கமாக வாங்கவேண்டிய நிலையும் இருக்கிறது.

இதனால் தான் வேறுவழியின்றி பல நாடுகளின் நிபந்தனைகள் மற்றும் பொறிகளில் சிக்கிக்கொள்ளாமல், தனியொரு நாட்டுக்கு மட்டும் அடிமையாக இருந்துவிடுவதன் மூலம் அந்நாட்டின் உதவிகளை வரையறை இல்லாமல் எடுத்துக்கொள்ளலம் என சீனாவிடம் கையை நீட்டித் தலையைக் கொடுக்க கோத்தா - மஹிந்த அரசு முயன்றிருந்தது என்று கருதவும் இடமுண்டு.

ஆனால் அப்படியான தவறான பொருளாதாரக் கொள்கைகளும், அந்தந்த நிலையில் ’கடனை வாங்கிக்கொள்ளலாம், கட்டுவதைப் பின்னர் பார்க்கலாம்’ என்று எடுக்கப்பட்ட முடிவுகளும் சேர்ந்து தான் நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டுவந்து நிறுத்தியிருக்கின்றன,

இப்போது முள்ளிலிருந்து சேலையை மிகப் பக்குவமாக எடுக்கும் முயற்சியில், நீருக்கு அடியிலும் விளக்கை எடுத்துச் செல்லக்கூடியவரான ரணில் விக்கிரமசிங்க ஈடுபட்டு வருகிறார்.

முதல் அடி வெற்றி ! - அதுதான், சர்வதேச நாணய நிதியத்தின் முதற்கட்ட ஒப்பந்தம்.

ஆனால் அடுத்தடுத்த கட்டம் ,அதுவும் சீனாவின் பங்கேற்றல் மற்றும் சம்மதத்துடன் என்பது செயலில் மிகக் கடினமானது.

அவதானிப்போம்...!



எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI



# மூன்று அரச நிறுவனங்களை உடனடியாக தனியார் மயமாக்கினால் நெருக்கடியில் இருந்து இலங்கை மீளும்!



கலாநிதி முத்துகிருஷ்ணன் சர்வானந்தன்
Muttukrishna Sarvananthan Ph.D. (Wales, Swansea) M.Sc. (Bristol) M.Sc. (Salford) B.A. (Hons) (Delhi)

**பொருளியல் நிபுணரான முத்துக்கிருஷ்ணன் சர்வானந்தன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளராகப் பதவி வகித்தவர். இலங்கையின் பருத்தித்துறை அபிவிருத்தி நிறுவனத்தின் (Point Pedro Institute of Development) முதன்மை ஆராய்ச்சியாளர். பிராட்போர்ட் பல்கலைக்கழகம் (2005/6) மற்றும் ஐக்கிய நாடுகளின் அமைதிக்கான பல்கலைக்கழகம் (2005-2008) ஆகியவற்றுக்கான மோதல் தீர்வு மற்றும் பாதுகாப்பு ஆய்வுகள் தொடர்பாகப் பங்களித்தவர். செப்டம்பர் 2011 முதல் பிப்ரவரி 2012 வரை மெல்பேர்னில் உள்ள மோனாஷ் பல்கலைக்கழகத்தின் (Research Centre of Monash University in Melbourne) உலகளாவிய பயங்கரவாத ஆராய்ச்சி மையத்தில் ஒரு முயற்சி ஆராய்ச்சி உறுப்பினராகவும், வாஷிங்டனில் உள்ள ஜார்ஜ் வாஷிங்டன் பல்கலைக்கழகத்தின் (George Washington University in Washington) எலியட் ஸ்கூல் ஆஃப் இன்டர்நேஷனல் அஃபயர்ஸில் ஃபுல்பிரைட் விசிட்டிங் ரிசர்ச் ஸ்கொலராகவும் இருந்திருக்கிறார்.**

**வேல்ஸ் பல்கலைக்கழகம், ஸ்வான்சீயின் மேம்பாட்டு ஆய்வுகள் மையத்தில் வளர்ச்சிப் பொருளாதாரத்தில் முனைவர் பட்டம் பெற்றவர். பிரிஸ்டல் பல்கலைக்கழகத்தின் சமூகக் கொள்கை மற்றும் சமூக திட்டமிடல் துறையில் வளர்ச்சித் திட்டமிடல் மற்றும் நிர்வாகத்தில் முதுகலை அறிவியல் பட்டத்தையும் பெற்றவர். மேலும் Economy of the Conflict Region in Sri Lanka: From Embargo to Repression (Policy Studies) உள்ளிட்ட பல வேறு நூல்களையும் பல கட்டுரைகளையும் எழுதியிருக்கிறார்.**

**இலங்கை இப்போது எதிர்கொண்டிருக்கும் மிகச் சிக்கலான பொருளாதார நெருக்கடியிலிருந்து எப்படி மீளலாம் என்பதைக் குறித்து கலாநிதி முத்துக்கிருஷ்ணன் சர்வானந்தாவுடன் எதிரொலிக்காக பேசியபோது...**

**செவ்வி கண்டவர்: அரவிந்தன்**

**கேள்வி: இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை எப்படித் தீர்க்க முடியும்? எவ்வளவு காலத்திற்குள் இதைத் தணிக்கலாம்?**

**பதில்:** எனது அறிவார்ந்த கணிப்பின்படி இலங்கை அதன் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு குறைந்தது ஐந்து வருடங்களாவது எடுக்கும். எவர் அரசாட்சிப் பொறுப்பிலிருந்தாலும் குறுகிய காலத்தில் இந்தப் பெரும் நெருக்கடியிலிருந்து மீளவே முடியாது. இந்த யதார்த்தத்தை பொறுப்புள்ள அரசாங்கம் மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும். எவ்வளவு கசப்பாக இருந்தாலும் மக்களும் இந்த யதார்த்தத்தினைப் புரிந்துகொள்ள வேண்டும். பொறுமையாக இருக்கவேண்டும். ஒரு கட்டடத்தை உடைத்த பின் இரவோடு இரவாக மீளக்கட்டி எழுப்பலாமா?

'இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை எப்படித் தீர்க்க முடியும்?' என்ற கேள்விக்குப் பதிலளிக்க வேண்டுமாயின் இந்தப் பொருளாதார நெருக்கடிக்கான காரணங்களை நான் விளங்கப்படுத்த வேண்டும். இதன் மூலகாரணம் 1948ஆம் ஆண்டு ஆரம்பமானதாயினும் நேரப்பற்றாக்குறை காரணமாக இங்கு 1977ஆம் ஆண்டுக்குப் பின்னான காரணங்களை மட்டுமே குறிப்பிடுகிறேன்.

எனது கருத்து என்னவென்றால், இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கான பிரதான காரணம் 1977இலிருந்து மேற்கொள்ளப்பட்டு வந்த பொருளாதார தாராளமயமாக்கல் கொள்கைகள் (economic liberalisation policies) அல்ல. மாறாக, பொருளாதார தாராளமயமாக்கல் கொள்கைகளுக்கு சமாந்தரமாக கட்டமைப்பு / நிறுவன ரீதியான பொருளாதார மறுசீரமைப்புகள் (structural/institutional economic reforms) மேற்கொள்ளப்படாமையே தற்கால பொருளாதார வீழ்ச்சிக்கான பிரதான காரணம் ஆகும்.

அதாவது, பொருளாதார தாராளமயமாக்கல் கொள்கைகளான அத்தியாவசியப் பொருட்களின் விலைக்கட்டுபாடுகளை நீக்குதல், அந்நிய செலாவணி கட்டுப்பாடுகளை நீக்குதல் அல்லது தளர்த்துதல், ரூபாவுக்கும் அந்நிய நாணயங்களுக்கும் (குறிப்பாக அமெரிக்க டொலருக்கும்) இடையிலான நிலையான நாணய மாற்று விகிதங்களை இல்லாது ஒழித்தல், ஏற்றுமதி மற்றும் இறக்குமதிகளுக்கு இருந்த வரிசாரா தடைகளை (non-tariff barriers) முற்றாக நீக்குதல், ஏற்றுமதி வரிகளை நீக்குதல், மற்றும் இறக்குமதி சுங்க வரிகளை குறைத்தல் போன்றவற்றுக்கு மேலாக பொருளாதாரத்தில் அரச தலையீடுகளையும் பங்களிப்புகளையும் குறைத்தல் அல்லது இல்லாது ஒழித்தல், மற்றும் அரச உரிமையான வியாபாரங்களை (state-owned enterprises) படிப்படியாக குறைத்தல் போன்ற கட்டமைப்பு / நிறுவன ரீதியான பொருளாதார மறுசீரமைப்புகள் மேற்கொண்டிருக்கப்பட வேண்டும்.

முன் குறிப்பிடப்பட்டவைக்கு மாறாக அரசசார்பு நிறுவனங்களும் வியாபாரங்களும் 1977 க்குப் பின் இற்றைவரை வெவ்வேறு அரசாங்க காலங்களிலும் மேலும் விஸ்தரிக்கப்பட்டன .

உதாரணத்திற்கு, தனியார்துறைதான் பொருளாதார வளர்ச்சியின் இயந்திரம் (engine of growth) என்ற தாரக மந்திரத்தினை உதட்டளவில் அன்றைய அரசாங்கமும் அடுத்து வந்த அரசாங்கங்களும் காலா காலமாக கூறி வந்த பொழுதிலும் தனியார் துறைக்கு மேலாக அரசதுறையும் (government) மற்றும் குறை-அரசதுறையும் (semi-government) தான் பெருகிவந்த சனத்தொகையினருக்கு பிரதானமாக (தேவைக்கு மேலாக) வேலை வாய்ப்புகளை வழங்கி வந்தன.

உதாரணத்துக்கு, இலங்கையின் சனத்தொகை 1981 இற்கும் 2022 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் 47 வீதத்தினால் மட்டுமே (அதாவது 1981 இல் 15 மில்லியனிலிருந்து 2022இல் 22 மில்லியனுக்கு) அதிகரித்திருக்க, இலங்கையில் மொத்த அரச ஊழியர்களின் எண்ணிக்கை 100 வீதமாக 1980 இல் 600000 (6 இலட்சம்) இருந்து 2022இல் மொத்தமாக 1200000 (12 இலட்சம்) இற்கு அதிகரித்துள்ளது. (அரசதுறை மற்றும் குறை-அரச துறை ஊழியர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனர்). 2016 ஆம் ஆண்டில் அரச மற்றும் குறை-அரச ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை 11 இலட்சமாக இருந்தது. இதற்கு புறம்பாக, இன்று, 3 இலட்சம் பேர் ஆயுதப்படைகளில் பணி புரிகின்றனர். (இந்த எண்ணிக்கையானது பிரித்தானியாவின் ஆயுதப்படையினரின் எண்ணிக்கையை விட இரண்டு மடங்கு ஆகும் - பிரித்தானியாவின் மொத்த சனத்தொகை 67 மில்லியன் ). ஆகவே, ஒட்டு மொத்தத்தில் 15 இலட்சம் பேர் அரச சேவைகளில் இன்று பணிபுரிகின்றனர். இலங்கையின் சனத்தொகைக்கு ஏற்ப அரச சேவையாளர்களின் மொத்த எண்ணிக்கையானது ஆசியாவிலேயே மிக உயர்ந்ததொன்று என்று கூறினால் மிகையாகாது.

1987 ஆம் ஆண்டுக்குப் பின், பெருகி வரும் அரச மற்றும் குறை-அரச துறை ஊழியர்களினதும் ஆயுதப்படையினரதும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள், மற்றும் ஏனைய வருடாந்த மீள்வரும் செலவினங்களைக் (annual recurrent expenditures) கூட அரசாங்கத்தின் வருடாந்த வரி மற்றும் வரிசாரா வருவாய்கள் (tax and non-tax revenue) ஈடுசெய்ய முடியவில்லை. அதாவது, அரச சேவையாளரின் சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகள், மற்றும் ஏனைய வருடாந்த மீள்வரும் செலவினங்களுக்குக் கூட உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் ஓரளவு கடன் பெறவேண்டிய துர்ப்பாக்கிய நிலையிலேயே இலங்கை 1987 க்குப் பின் இற்றைவரை இருந்து வந்துள்ளது. முன்வருபவனவற்றிற்கு மேலாக வருடாந்த மூலதனச் செலவுகளுக்கும் பொதுக் கடன்களுக்கான வருடாந்த வட்டியையும் முதலையும் மீள்செலுத்துவதற்காகவும் 1987இற்குப் பின் இற்றைவரை வருடாவருடம் கடன்பெற வேண்டியதாயிற்று.

மேற்கூறப்பட்ட அரச செலவினங்களுக்கு மேலாக இலஞ்சம், ஊழல் போன்றனவையும் 1977இற்குப் பின் இற்றை வரை இலங்கையில் பன்மடங்கு அதிகரித்துள்ளன.

மேற்கூறப்பட்ட அரச செலவினங்கள் அதிகரிப்புக்கும் இலஞ்ச ஊழல் அதிகரிப்புக்கும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையும் விகிதாசாரத் தேர்தல் முறைமையும் பெரும் பங்களிப்பு செய்துள்ளன. ஏனெனில் விகிதாசாரத் தேர்தல் முறைமையின்படி வேட்பாளர்கள் தொகுதி ரீதியாக அன்றி மாவட்ட ரீதியாக பிரசாரம் செய்யவேண்டியுள்ளதால் ஒவ்வொரு வேட்பாளரும் பெருமளவு பணத்தை தேர்தல் பிரசாரத்திற்காக செலவிடவேண்டியுள்ளது. இதன் காரணமாக கல்விகற்ற, துறைசார்ந்த, மற்றும் அல்லது நேர்மையான வேட்பாளருக்குப் பதிலாக கள்ள வியாபாரிகள், போதைப்பொருள் கடத்தல்காரர்கள் போன்ற சமூகவிரோதிகளே 1977 க்குப் பின் தேர்தல் வேட்பாளர்களாக பெரும்பாலான அரசியல் கட்சிகளினால் நிறுத்தப்படுகின்றனர். இந்தச் சீர்கெட்ட அரசியல்வாதிகளுக்கு இலஞ்சம் ஊழல் என்பன சர்வசாதாரணமானவை.

மேலும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை காரணமாக பல்வேறு சிறு கட்சிகளும் (குறிப்பாக இனம், மதம், மற்றும் பிரதேசம் சார்ந்த சிறு கட்சிகள்) அரச அமைப்பாளர்களாக (queen makers / king makers) விஸ்பரூபம் எடுத்துள்ளனர். இந்தச் சிறு அரசியற் கட்சிகளின் அளவுக்கு மிஞ்சிய செல்வாக்கு ஸ்திரமான ஒரு அரசாங்கம் அமைப்பதற்கு இன்றியமையாததாக இருப்பதன் காரணமாகவே தேவைக்கு மிக அதிகமான அமைச்சர்கள், பிரதி அல்லது இராஜாங்க அமைச்சர்கள், குறை - அரச (semi-government) சேவையாளர்கள், மற்றும் அரசியல் நியமனம் பெற்ற இராஜதந்திரிகள் பெருவாரியாக, 1977 க்குப் பின் அதிகரித்துள்ளனர். இவை அனைத்தும் இலங்கையில் அரச ஆளுமையை சீர்கெடுத்துள்ளது.

இதற்கு மேலாக, பெரிய அரசியல் கட்சி அரசியல்வாதிகள் போலவே சிறு கட்சி அரசியல்வாதிகளும் இலஞ்சம், ஊழல் என்பனவற்றில் ஜாம்பவான்கள் என்பது யாவரும் அறிந்ததே. உதாரணத்துக்கு, தொண்டமான் குடும்பத்தினர் காலா காலமாக பெருந்தோட்டத் தொழிலாளர்களின் இரத்தத்தை உறிஞ்சி தமது அரசியல் கட்சிக்கு சந்தாப்பணம் பெற்று அமைச்சுப் பதவிகள் வகித்து , அதன் மூலம் இலஞ்சம் பெற்று அந்தப்பணத்தையெல்லாம் இந்தியாவின் தமிழ்நாடு, தெலுங்கானா, ஆந்திர மற்றும் வட மாநிலங்களில் தொழிற்சாலைகள், காணிகள், மனைகளில் முதலீடு செய்து பல்வேறு சொத்துக்களுக்கும் உரிமையாளர்களாகியுள்ளனர். இவ்வாறே, ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீன் போன்ற முஸ்லிம் அரசியல்வாதிகளும் இலஞ்சம் ஊழல்களில் பெரும்புள்ளிகள். இல்லாவிட்டால், அரசியலமைப்பின் 18 ஆம், 19 ஆம் மற்றும் 20 ஆம் திருத்தங்களுக்கு அதே கட்சியைச் சேர்ந்த அதே நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் பிரதி / இராஜாங்க அமைச்சர்களும் எவ்வாறு வாக்களித்திருக்க முடியும்? இவர்களுக்கென்று ஒரு கொள்கையும் இல்லை. மனச்சாட்சியும் இல்லை. தமது இனத்தவரையும் மதத்தவரையும் பேரம்பேசி தமது குடும்பத்தாருக்கு சம்பாதிப்பதே அவர்களின பிரதான நோக்கு. இவர்கள் காலா காலம் காற்று எந்தப்பக்கம் வீசுகிறதோ அந்தப் பக்கம் சாய்வார்கள். அவர்களது இன மதத்தவர்களின் நன்மை தீமைகளைக் கருத்திற்கொள்வது இல்லை.

மக்கள் விடுதலை முன்னணி (JVP) போன்ற சிறு கட்சிகளும் அரசியல் நேர்மையாளர்கள் அல்லர். அவர்கள் 1980 களில் விடுதலை என்ற போர்வையில் மேற்கொண்ட மனிதப் படுகொலைகளுக்கு (இந்திய வம்சாவளி வர்த்தகர்கள் உட்பட) இற்றைவரை மன்னிப்புக் கோரியதில்லை. இருந்தபொழுதிலும் இலஞ்சம் ஊழல் போன்றவற்றில் அவர்கள் ஈடுபடுவதில்லை என்பதனை நம்பலாம்.

ஒட்டு மொத்தத்தில், 1977 க்குப் பின்னான தாராளமயமாக்கப்பட்ட பொருளியல் கட்டமைப்புக்கு மாறாக மேற்கூறப்பட்ட அரசாண்மை மாற்றங்களே இன்றைய பொருளாதார நெருக்கடிக்கான பிரதான காரணிகளாகும்.

இந்தப் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான சில பரிந்துரைகளை கீழே முன்மொழிகிறேன்.

உடனடியாக அல்லது குறுகிய காலத்தில் (அடுத்த இரண்டு வருடத்துக்குள்) செய்ய வேண்டியவை.

1. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை உடனடியாக இரத்து செய்து விகிதாசார தேர்தல் முறையை உடன் இல்லாதொழிக்க வேண்டும். இதற்கான அரசியலமைப்பு திருத்தத்தினை உடன் நாடாளுமன்றம் நிறைவேற்ற வேண்டும்.

2. சிறிலங்கன் விமானசேவையை (Sri Lankan Airlines) உடனடியாக அந்நிய நாட்டு விமானசேவைக்கு விற்பனை செய்யவேண்டும். உள்நாட்டு தனியார் கொம்பனிக்கு விற்றால் அவர்கள் இலங்கையின் அந்நிய செலாவணியைப் பாவிப்பார்கள். இது இலங்கைக்குப் பாதகமானது. சிறிலங்கன் விமானசேவையை வாங்குபவர்கள் எவராக இருப்பினும் அவர்கள் தமது வியாபார செயற்பாடுகளுக்கு இலங்கையில் இருக்கின்ற வங்கிகளிடமிருந்து அந்நிய செலாவணியைப் பெறுவது தடை செய்யப்படவேண்டும்.

சிறிலங்கன் விமானசேவையின் 48% பங்குகள் எமிரேட்ஸ் விமானசேவைக்கு 1997 இல் விற்கப்பட்டு அதன் முகாமைத்துவம் எமிரேட்ஸிடம் 10 ஆண்டுகளுக்கு வழங்கப்பட்டது. ஆனால் 2007 இல் அன்றைய இலங்கை அரசாங்கம் மீண்டும் தமது பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து பெரும் தவறு இழைத்துவிட்டது. கடந்த சில வருடங்களாக சராசரியாக வருடாந்தம் 250 மில்லியன் அமெரிக்க டொலர் நட்டத்தில் இயங்குகிறது. ஆகவே, இதனை விற்பதன் மூலம் வருடத்துக்கு 250 மில்லியன் டொலர் சேமிக்கலாம்.

3. அரச வியாபாரமான லிட்ரோ எரிவாயு (Litro Gas) கம்பனியை உடன் அந்நிய நாட்டுக் கம்பனிக்கு விற்பனை செய்ய வேண்டும். இந்த அரச வியாபாரத்தை வாங்குபவர்கள் எவராக இருப்பினும் அவர்கள் தமது வியாபாரச் செயற்பாடுகளுக்கு இலங்கையில் இருக்கின்ற வங்கிகளிடமிருந்து அந்நிய செலாவணியைப் பெறுவது தடைசெய்யப்படவேண்டும். எரிவாயு இறக்குமதிக்காக வருடத்துக்கு 300 மில்லியன் டொலர் அந்நியச் செலாவணி தேவைப்படுகிறது. ஆகவே, இதனை விற்பதன் மூலம் வருடத்துக்கு 300 மில்லியன் டொலர் அந்நிய செலாவணியைச் சேமிக்கலாம்.

அரச வியாபாரமான இலங்கை எரிவாயு (Ceylon Gas), ஷெல் எரிவாயு (Sell Gas) என்ற பன்னாட்டு கம்பனிக்கு 5 வருடங்களுக்கு 1998 இல் முற்றாக விற்கப்பட்டது. பின்பு 2003 இல் மேலும் 5 வருடங்களுக்கு நீடிக்கப்பட்டது. ஆனால் 2008 இல் அன்றைய அரசாங்கம் மீண்டும் அதனை லிட்ரோ எரிவாயு என்ற பெயரில் அரச உடமையாக்கி நாட்டு மக்களுக்கு பெரும் துரோகம் இழைத்துவிட்டது. ஏனெனில், இது 2008 இலிருந்து வருடாவருடம் பெரும் நட்டத்தில் இயங்குகிறது.

4. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தையும் உடனடியாக வெளிநாட்டுக் கம்பனிக்கு விற்பனை செய்யவேண்டும். இந்த அரச வியாபாரத்தை வாங்குபவர்கள் எவராக இருப்பினும் அவர்கள் தமது வியாபாரச் செயற்பாடுகளுக்கு இலங்கையில் இருக்கின்ற வங்கிகளிடமிருந்து அந்நியச் செலாவணியைப் பெறுவது தடைசெய்யப்படவேண்டும். ஆகவே பெற்றோலியம் உற்பத்தி செய்யும் நாடு ஒன்றுக்கு (உதாரணத்துக்கு சவூதி அரேபியா) இதனை விற்று விடவேண்டும்.

பெற்றோலியப் பொருட்கள் இறக்குமதி செய்வதற்காக சராசரியாக வருடத்துக்கு 3000 தொடக்கம் 4000 மில்லியன் (அதாவது 3 தொடக்கம் 4 பில்லியன்) டொலர் செலவிடப்படுகிறது. இந்த இறக்குமதிச் செலவினம் இலங்கையின் வருடாந்த மொத்த இறக்குமதி செலவினங்களில் சராசரியாக 20% ஆகும். ஆகவே, பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை பெற்றோலிய உற்பத்தி நாடு ஒன்றிற்கு விற்றால் வருடத்துக்கு 4 பில்லியன் டொலர் அந்நிய செலாவணியை மீதப்படுத்தலாம்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பல தசாப்தங்களாக நட்டத்தில் இயங்கும் அரச வியாபாரமாகும். அத்தோடு மிகவும் ஊழல் நிறைந்த கூட்டுத்தாபனம் ஆகும்.

மேற்கூறப்பட்ட 3 அரச வியாபாரங்களின் விற்பனைகள் மூலமாக வருடத்துக்கு கிட்டத்தட்ட 5 பில்லியன் அமெரிக்க டொலர் வரை அந்நிய செலாவணியை இலங்கை அரசாங்கம் சேமிக்கலாம். மேற்கூறிய மூன்று வியாபாரங்களும் இடதுசாரிகள் கூறுவது போல தேசிய சொத்துக்கள் (national assets) அல்ல, இவை தேசிய பொறுப்புகள் (national liabilities) ஆகும்.

மேற்கூறப்பட்டவை போன்றே இலங்கை முற்றுமுழுதாக இறக்குமதியில் தங்கியிருக்கும் அத்தியாவசிய நுகர்வுப் பொருட்களான கோதுமை மா, விவசாயத்துக்கு தேவையான பசளைகள், மற்றும் பால்மா போன்றவற்றின் இறக்குமதி மற்றும் உள்ளூர் விற்பனைகளை பல்தேசிய கம்பனிகளுக்கு கொடுத்து விடவேண்டும். இவற்றுக்கான அந்நியச் செலாவணியை இலங்கையில் உள்ள வங்கிகளிடமிருந்து பெறுவதினைத் தடை செய்ய வெண்டும்.

5. பொதுநிர்வாக சேவைகளுக்கும் குறை - அரச (semi-government) சேவைகளுக்கும் புதிதாக ஊழியர்களை மற்றும் உத்தியோகத்தர்களை நியமிப்பதை உடன் நிறுத்தவேண்டும் (உயர் தொழில்நுட்ப வியலாளர்கள் தவிர).

6. ஆயுதப்படைகளுக்கு புதிதாக ஆட்சேர்ப்பதை உடன் நிறுத்தவேண்டும் (உயர் தொழில்நுட்பவியலாளர்கள் தவிர).

நடுத்தர காலத்தில் (அதாவது, அடுத்த 2 வருடத்திலிருந்து 5 வருடங்களுக்குள்) செய்யவேண்டியவை -

1. கல்வி, சுகாதாரம் தவிர்ந்த ஏனைய பொது நிர்வாக மற்றும் அரச சேவையாளர்களின் எண்ணிக்கையை ஆகக் குறைந்தது 33 சதவீதத்தால் குறைக்க வேண்டும். மேற்கூறியபடி தற்போது 12 இலட்சம் சிவில் அரச ஊழியர்கள் இருக்கையில், 4 இலட்சம் அரச ஊழியர்களுக்கு விருப்பு ஓய்வுத்திட்டம் (voluntary retirement scheme) மூலமாகவோ அல்லது பொன்னான கைகுழுக்கள் (golden handshake) மூலமாகவோ அரச சேவையிலிருந்து பிரியாவிடை கொடுக்க வேண்டும்.

2. மேற்கூறியவாறே, ஆயுதப்படையைச் சேர்ந்த 50 சதவீதத்தினருக்கு விருப்பு ஓய்வுத் திட்டம் (voluntary retirement scheme) மூலமாகவோ அல்லது பொன்னான கைகுழுக்கள் (golden handshake) மூலமாகவோ இராணுவ சேவையிலிருந்து பிரியாவிடை கொடுக்க வேண்டும். அதாவது, தற்போது 300,000 ஆளணி கொண்ட ஆயுதப்படையினரை 150,000 ஆகக் குறைக்க வேண்டும்.

3. இலங்கை மின்சார சபை பெரும் நட்டத்தில் பல தசாப்தங்களாக இயங்கி வருகிறது. இதனை அடுத்த 2 தொடக்கம் 5 வருடங்களுக்குள் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு தனியார்துறைக்கு விற்று விடவேண்டும்.

4. இவ்வாறே என்றும் நட்டத்தில் இயங்கி வரும் அரச வியாபாரங்களான இலங்கை புகையிரதக் கூட்டுத்தாபனம் (Sri Lanka Railways) மற்றும் இலங்கை போக்குவரத்துச் சபை (Sri Lanka Transport Board) போன்றவற்றினை உள்நாட்டு அல்லது வெளிநாட்டு தனியார்துறைக்கு விற்று விடவேண்டும்.

5. பெரும் நட்டத்தில் இயங்கி வரும் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகால் சபை (National Water Supply & Drainage Board) என்பனவும் விற்பனை செய்யப்பட வேண்டும்.

6. அனைத்து அரசவங்கிகளையும் படிப்படியாக அடுத்த 5 வருடத்துக்குள் தனியார் மயப்படுத்த வேண்டும்.

மேற்கூறப்பட்ட பொருளாதார மறுசீரமைப்புகள் மூலம் பெறப்படும் ஆதாயங்களை கல்வி, சுகாதாரம், மற்றும் வறுமை ஒழிப்பு போன்ற சமூக பாதுகாப்புத் (social security) திட்டங்களுக்கு அரசாங்கம் பயன்படுத்த வேண்டும்.

**கேள்வி: உறுதியான அரசாங்கமொன்றின் அவசியத்தை ஐ.எம்.எப் வலியுறுத்தியுள்ளது. இதை எப்படிச் சாத்தியமாக்குவது? இலங்கையின் அரசியல் சூழல், கட்சிகளின் மனநிலை இதற்கு எந்தளவுக்கு வாய்ப்பளிக்கும்?**

**பதில்:** ஒரு உறுதியான அரசாங்கத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் கடந்த வாரம் சர்வதேச நாணய நிதியத்துடன் அதிகாரிகள் மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையை நாட்டு மக்களுக்குப் பகிரங்கப்படுத்தி அதற்கான மக்கள் ஆணையை ஒரு நாடாளுமன்றத் தேர்தல் மூலம் பெறப்படல் வேண்டும்.

**கேள்வி: சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவியும் நிபந்தனைகளும் நாட்டுக்கு அளிக்கின்ற நன்மைகள் எவை? அல்லது அவற்றை எப்படி நன்மைகளாக மாற்றிக் கொள்ள முடியும்? சர்வதேச நாணய நிதியத்தின் வருகை, நாட்டுக்கு பாதகமான விளைவுகளையே தரும் என்று ஒரு சாரார் எச்சரிக்கிறார்களே!**

**பதில்:** சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவி நேரடியாக நாட்டுக்கு அளிக்கின்ற நன்மைகள் சிறிதளவே. உதாரணத்துக்கு, கடந்த வாரம் அதிகாரிகள் மட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின்படி 2.9 பில்லியன் டொலரை சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு எதிர்வரும் நான்கு வருடங்களில் வழங்க உத்தேசித்துள்ளது. ஆனால் மறைமுக நன்மைகள் பெருவாரியானவை. ஒரு நாடு சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவியைப் பெற்றிருந்தால் அது அந்த நாட்டுக்கு உதவக்கூடிய ஏனைய நாடுகளுக்கும் சர்வதேச நிதி நிறுவனங்களுக்கும் மற்றும் சர்வதேச முதலீட்டாளருக்கும் எமது நாட்டின் வருங்கால பொருளாதார ஸ்திரத்தன்மை சம்பந்தமான ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. ஏனெனில் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவி பெற்ற ஒவ்வொரு நாடும் அந்தக் கடன் உதவிக் காலப்பகுதியில் (இலங்கையைப் பொறுத்தவரை எதிர்வரும் 4 வருடங்களுக்கு) சர்வதேச நாணய நிதியத்தின் தீவிர பொருளியல் கண்காணிப்பில் இருந்து வரும். சுருங்கக் கூறின் சர்வதேச நாணய நிதியமானது அதன் கடனாளி நாடுகளின் ஒரு கண்காணிப்பு நாய் (watch dog) ஆகும்.

இந்த நேரத்தில் கடந்த வாரம் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் கூறியதனை நினைவு கூருவோம். 'அமெரிக்கா இலங்கைக்கான நிதி உதவிகளை சர்வதேச நாணயநிதியம் ஊடாக மும்மடங்காக அதிகரிக்க இருக்கின்றது 'எனக் கூறியிருந்தார். இது நான் மேற்கூறிய சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவியின் மறைமுக அனுகூலங்களுக்கு ஒரு சிறந்த உதாரணம் ஆகும்.

சர்வதேச நாணய நிதியம் கடன் வழங்குவதற்கு பொருளாதாரச் சீர்திருத்தங்கள் சம்பந்தமான சில பரந்துபட்ட நிபந்தனைகளை விதிப்பது உண்மையே. ஆனால் அந்த பரந்துபட்ட நிபந்தனைகளைஎந்த வகையான பொருளாதார கொள்கைகள் மூலம் பூர்த்தி செய்யலாம் என்பதனை தீர்மானிப்பது எமது அரசாங்கமே. எனவே, சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை பூர்த்தி செய்ய எமது அரசாங்கம் மேற்கொள்ளும் சில பொருளாதார மற்றும் நிதிக் கொள்கை மாற்றங்கள் பொதுமக்களின் ஒரு சாராரை எதிர்மறையாகப் பாதிக்குமாயின் அந்தப்பழியை சர்வதேச நாணய நிதியத்தின் மீது சுமத்தக் கூடாது.

உதாரணத்துக்கு, கடந்த வாரம் நாடாளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட இடைக்கால பாதீட்டில் பெறுமதிசேர் வரி (Value Added Tax - VAT) 12 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாக அதிகரிக்கப்பட்டது. இது பணவீக்கத்தை அதிகரிப்பது மட்டுமல்லாமல் வருமானம் குறைந்த மக்களை எதிர்மறையாகப் பாதிக்கும் என்பது உண்மையே. சர்வதேச நாணய நிதியம் பெறுமதிசேர் வரியை அதிகரிக்கும்படி முன்மொழியவில்லை. அந்தத் தீர்மானத்தினை எமது அரசாங்கமே சுயாதீனமாக மேற்கொண்டது. இதற்கு சர்வதேச நாணய நிதியத்தின மீது பழிசுமத்துவது முற்றிலும் நியாயமற்றது.

எமது அரசாங்கம் ஒரு நீதியான, நியாயமான அரசாங்கமாக இருந்திருந்தால் நுகர்வு வரி (consumption tax) உயர்வுக்குப் பதிலாக வருமான வரியை அதிகரித்திருக்கும். வருமான வரி அதிகரிப்பது பணவீக்கத்தினை உயர்வடையச் செய்யாது. மற்றும் வசதியுடையோரே வருமான வரி செலுத்துகின்றனர். எனவே வருமான வரி அதிகரிப்பு மூலம் பாமர மக்கள் பாதிப்படைந்திருக்க மாட்டார்கள். இந்த விடயத்தில் சர்வதேச நாணய நிதியமா? எமது அரசாங்கமா வில்லன் என்பதனை வாசகர்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

இன்னுமொரு உதாரணம், சர்வதேச நாணய நிதியமானது வரவு -செலவு பற்றாக் குறையை மொத்த உள்ளூர் உற்பத்தியில் 5 சதவீதத்துக்கும் குறைவாகப் பேணும்படி தமது உறுப்பு நாடுகளை வலியுறுத்துவது சகஜமே. ஆனால் மேற்படி நிபந்தனையை பூர்த்தி செய்யும் முகமாக தமது உறுப்பு நாடுகளின் கல்வி, சுகாதாரம், வறுமை ஒழிப்பு, மற்றும் சமூக நலன் சார்ந்த அரச செலவினங்களை குறைக்கும் படி நிபந்தனை விதிப்பது இல்லை. வரவு-செலவு பற்றாக்குறையை மொத்த உள்ளூர் உற்பத்தியில் 5 சதவீதத்திற்குக் குறைவாகப் பேணுவதற்காக அரச செலவினங்களில் எவற்றைக் குறைக்க வேண்டும் என்பதனை தீர்மானிக்கும் முழுப்பொறுப்பும், அதிகாரமும் எமது அரசாங்கத்திடமே இருக்கின்றது.

வரவு -செலவு பற்றாக்குறையை மொத்த உள்ளூர் உற்பத்தியில் 5 சதவீதத்துக்குக் குறைவாகப் பேணுவதற்காக எமது அரசாங்கம் கல்வி, சுகாதாரம், வறுமை ஒழிப்பு, மற்றும் சமூக நலன் சார்ந்த செலவினங்களைக் குறைக்க முற்படுமாயின், அது நாட்டு மக்களுக்கு பாதகமானதாகவே அமையும். முன் கூறியதற்கு மாறாக அரசாங்கம் பாதுகாப்புச் செலவினங்கள் மற்றும் அரச துறையில் நிகழும் வீண்விரயங்கள் மற்றும் ஊழல்களை குறைப்பதன் மூலம் வரவு -செலவு பற்றாக்குறையை மொத்த உள்ளூர் உற்பத்தியில் 5 சதவீதத்துக்குக் குறைவாகப் பேணுமாயின் பெருவாரியான பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படாது.




**த.த :** என்ன அண்ணே கோயில் பக்கம் உங்களைக் காணோம்?

**ஈ.அ:** எந்தக் கோயிலடாப்பா?

**த.த :** எந்தக் கோயிலா? மெல்பேர்ண்லயே ரொம்ப ஃபேமஸான கோயில்னா யாருன்னாலும் சொல்லுவாங்களேண்ணே!

**ஈ.அ:** அந்தக் கோவிலுக்கு நான் இனிப் போறதா இல்லை. மலையில இருக்கிற முருகன் கோவிலுக்கு தான் இனிப் போறது.

**த.த :** என்னாண்ணே, அவரோட அப்பா கூடயும் மாமா கூடயும் அப்பிடி உங்களுக்கு என்ன காண்டு?

**ஈ.அ:** அவையளோட ஒரு கோபமும் இல்லை: கோயிலை நடாத்திறவையோட தான் எனக்கு கோபம்.

**த.த :** அப்பிடி என்னாச்சு?

**ஈ.அ:** தம்பி இப்ப கோயிலுக்கு நிர்வாக சபைக்கான தேர்தல் வருகுது.

**த.த :** சரி... வரட்டும்.

**ஈ.அ:** அதுக்கு அவுஸ்திரேலிய தேர்தல் அலுவலகத்தில 4000 டொலர் குடுத்து தேர்தல் நடத்தப் போகினமாம்..

**த.த :** என்ன அநியாயம்ணே இது? நம்ம ஊர்ல வட்டார தேர்தல், வார்டு தேர்தலுக்கு கூட இம்புட்டு செலவு பண்ண மாட்டாங்களே?

**ஈ.அ:** ஓசியில காசு கிடைச்சா, காசின்ர அருமை தெரியாது எண்டிறது இது தான் போல....

தங்களுக்குள்ள ஒரு நிர்வாகக் குழுவை தெரிவு செய்ய ஒரு கொஞ்சப்பேர் வாக்குப் போடுற இந்தத் தேர்தலுக்கு 4000 டொலர் செலவழிக்க தேவையா?

**த.த :** அட அண்ணே அது மட்டுமில்ல... பேங்க்ல எடுத்த லோனே கொடுக்க முடியாம பாக்கியா இருக்கு. இந்த லட்சணத்துல அவங்களுக்கு இது தேவையா ?

**ஈ.அ:** பாங்க் காரன் வேற வட்டிய கூட்டிக் கொண்டே இருக்கிறான்..

**த.த :** அண்ணே அது மட்டுமா? அன்னதான மண்டபம் கட்டி முடிக்கணும்னு இப்ப தான் காசு கேட்டாய்ங்க. நான் கூட 150 டொலர் குடுத்தேன்.

**ஈ.அ:** அது 10,000 டொலர் தான் மொத்தமாவே சேர்ந்தததாம்... அப்ப பாரன்டாப்பா காசு சேர்க்கவே இவ்வளவு கஷ்டம் எண்டா இப்ப உந்த தேர்தல் செலவுகள் தேவை தானா?

**த.த :** அது தானேண்ணே.. செலவு பண்றதுன்னா அது மக்களுக்கு உதவுற மாதிரி மக்கள் சேவை பண்ற மாதிரில்ல இருக்கணும்? இப்பிடி மக்கள் பணத்தை தங்களுக்காக தங்களோட தேர்தலுக்காக வேஸ்ட் பண்ற மாதிரி இருக்ககூடாதுல்ல...

**ஈ.அ:** தம்பி இதைச் சொல்லுறாய்.. இன்னொரு கதை தெரியுமே, அவையின்ர தேர்தல் பிரசார செலவுகளுக்கே உண்டியல்ல இருந்து தான் காசு போகுதாம்..

**த.த :** ஐயோ என்ன அண்ணே சொல்றீங்க.. கிடைக்கிற சில்லறைல காப்பி கூட குடிக்காம உண்டியல்ல இத்தின வருசமா சிதறவிட்டது இதுக்கு தானா?

**ஈ.அ:** பாத்திரம் அறிந்து பிச்சை போடு எண்டு சும்மாவா சொன்னவை. இப்ப விளங்கிட்டுத்தானே, எல்லாரும் யோசிச்சு முடிவெடுங்கோ.




# ஆஸ்திரேலிய அரசியலமைப்புச் சட்டம்
# (Australia constitutional law)

**சட்டத்தரணி - த.நா.ஜெயராசசிங்கம்**
இவர் முன்னாள் கொழும்பு பல்கலைக்கழக சட்டபீட உதவி விரிவுரையாளர். பின்னர் பிரிட்டனில் சட்டம் பயிற்று சட்டத்தரணியாகத் தேர்ச்சி பெற்றவர். பின் ஆஸ்திரேலியா மொனாஷ் பல்கலைக்கழகத்தில் சட்டம் பயின்றார். அதன் பின்னர் ஆஸ்திரேலியா விக்ரோறியா மாநிலத்தில் வழக்கறிஞராகத் தகுதிபெற்றவர். தற்போது சட்டம் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்.

**கட்டுரைக்குள் நுழைய முன்னர் ஒரு குறிப்பு:**
நான் எழுதும் சட்டம் சம்பந்தமான கட்டுரைகள் தனிப்பட்ட சட்ட ஆலோசனைகள் அல்ல. எங்களுக்கு ஒரு சட்டம் சம்பந்தமான பிரச்சினை எழுந்தால், நீங்கள் ஒரு தகுதிவாய்ந்த சட்டத்தரணியை அணுகி அந்தப்பிரச்சினையை அவரது ஆலோசனைப்படி தீர்க்க வேண்டும். நான் எழுதும் கட்டுரைகள் பொதுமக்களுக்கு சட்டம் சம்பந்தமான பொது அறிவைக் கொடுப்பதற்காக மட்டுமே. இவை சட்ட ஆலோசனைகள் அல்லவென்பதைக் கவனத்திற் கொள்க.

### ஆஸ்திரேலியாவில் சட்டம் எவ்வாறு ஆக்கப்படுகின்றது?
### How Laws are made in Australia?

சட்டம் என்று நாம் குறிப்பிடும்போது பொதுவாக நாம் மூன்று வகையான சட்டங்களைக் குறிப்பிடுகின்றோம்.

முதலாவதும் முக்கியமானதுமான சட்டம் நியதிச் சட்டம் (Statute Law) அல்லது நாடாளுமன்றத்தால் ஆக்கப்படும் சட்டம் ஆகும்.

இரண்டாவதாக உயர்நீதிமன்றங்களின் நீதிபதிகளால் ஆக்கப்படும் சட்டம் ஆகும். இது பொதுச்சட்டம் (Common Law) என அழைக்கப்படும்.

அடுத்ததாக, சட்டமாக ஓரளவு கருதக்கூடிய வழமை (Custom) அல்லது வழக்காறுகள் அல்லது சம்பிரதாயங்கள் (Conventions) என்பன ஆகும்.

நாம் இந்தக் கட்டுரையில் நாடாளுமன்றால் எவ்வாறு ஆஸ்திரேலியாவில் நியதிச்சட்டம் ஆக்கப்படுகின்றது எனப் பார்ப்போம்.

ஆஸ்திரேலியாவில் நியதிச்சட்டம் ஒன்று ஆக்கப்படும் போது மூன்று வகையான அமைப்புக்கள் அதில் பங்கேற்கின்றன. அவையாவன-

1. பொதுமக்கள் சபை (House of Representation)
2. செனற் சபை அல்லது மேற்சபை (Senate)
3. அரசி (Queen) அல்லது அரசியின் பிரதிநிதியான தேசாதிபதி (Governer Genral)

முதலில் நாம் பொதுமக்கள் சபையைப் பற்றிப் பார்ப்போம்.

ஆஸ்திரேலியா அரசியல், சட்டம் பற்றிய விடயங்களில் பெரும்பாலும் பெரிய பிரித்தானியாவையும் ஓரளவுக்கு ஐக்கிய அமெரிக்காவையும் பின்பற்றி வந்துள்ளத்துவருகின்றது.

பிரித்தானிய முறைமையை ஒட்டிய ஜனநாயக நாடுகள் என்பவற்றின் அடிப்படையாக அமைவது மக்கள் தமது பிரதிநிதிகளை இரகசிய வாக்கெடுப்பு மூலம் தெரிவு செய்வதாகும்.

மக்களின் வாக்குரிமை (Vote) என்பது பிரித்தானிய முறைமையைப் பின்பற்றும் நாடுகளின் அடிப்படை அத்திபாரமாகும்.

பொதுமக்கள் தமது வாக்குரிமை மூலம் தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்து நாடாளுமன்றத்துக்கு அனுப்பி வைப்பர்.

ஆஸ்திரேலிய பொதுமக்கள் சபை ‘கன்பராவில்’ அமைந்துள்ளது. ‘Canserra’ என்பது ஆஸ்திரேலிய ஆதிவாசிகளின் மொழியில் ‘Meeting Place’ எனப் பொருள்படும்.

பொதுமக்கள் சபைப் பிரதிநிதிகள் ஆஸ்திரேலிய முறைமைப்படி மூன்று ஆண்டுக்கு ஒருமுறை தெரிவு செய்யப்படுவர். ஆஸ்திரேலிய பொதுமக்கள் சபை 150 பிரதிநிதிகளைக் கொண்ட சபை ஆகும்.

பொதுமக்கள் சபையின் முக்கியமான பணியானது ஆஸ்திரேலிய மக்களின் சமூக, பொருளாதார, அரசியல் விழுமியங்களை (Valuse) பிரதிநிதித்துவப்படுத்தும் சட்டங்களை ஆக்குதல் ஆகும்.

பொதுவாகக் கூறினால் எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டம் ஒன்று ஆக்கப்பட வேண்டும் என முன்னெடுத்தாலும் நடைமுறையில் சட்டம் ஒன்று ஆக்கப்பட வேண்டும் என்பதனை அமைச்சரவையே (Cabinet) தீர்மானிக்கும்.

ஆஸ்திரேலிய அரசியலமைப்பு ஒரு எழுதப்பட்ட (Written) அரசியலமைப்பு என முன்னர் குறிப்பிட்டோம். இவ்வரசியலமைப்பில்‘அமைச்சரவை’ (Cabinet) என்ற பதம் குறிப்பிடப்படவில்லை. எனினும் ஆஸ்திரேலியா, பிரித்தானிய சட்டத்தைப் பின்பற்றிய ஏற்கப்பட்ட சம்பிரதாயம் (Convention) இது ஆகும்.

ஒரு சட்டம் ஆக்கப்பட வேண்டும் என அமைச்சரவை தீர்மானித்த பின் அந்தத்தீர்மானம் நாடாளுமன்ற சட்டவரைஞர் (Parliamentary Counsel) அவர்களுக்கு தெரிவிக்கப்படும்.

நாடாளுமன்ற சட்டவரைஞர்கள் சட்டம் பற்றிய அறிவும் அனுபவமும் கொண்ட சட்டவல்லுநர்கள் ஆவர்.

ஆஸ்திரேலிய முறைமைப்படி ஒரு சட்டமுன்வரைபு அல்லது மசோதா (Bill) எந்தவொரு சபையிலும் அறிமுகப்படுத்தப்படும். இதில் முக்கியமாக கவனிக்கப்பட வேண்டிய விடயம் என்னவெனில், நிதி சம்பந்தமான மசோதா பொதுமக்கள் சபையிலேயே அறிமுகப்படுத்தப்பட வேண்டும். அடுத்த நடைமுறை (Procedure) என்னவெனில் சட்டமுன் வரைபை முன்வைக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் தனது எண்ணத்தில், அறிவித்தல் (Notice) கொடுப்பார்.

அடுத்ததாக நாடாளுமன்ற எழுதுவினைஞர் (Clerk) சட்டமுன்வரைபின் தலைப்பை வாசித்து அறிவிப்பார்.

அத்தோடு சட்டமுன்வரைபின் நோக்கம், அதன் எல்லை என்பன பற்றி குறிப்பிடுவதோடு ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஒரு பிரதி வழங்குவர்.

இது முதல் வாசிப்பு (First Reading) என அழைக்கப்படும்.

அடுத்த சட்டமுன்வரைபை முன்வைக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் அச்சட்ட முன்வரைபின் நோக்கம் ,அதன் செயற்பாடு என்பன பற்றி விளக்கமான உரை ஒன்றை ஆற்றுவார்.

இது இரண்டாவது வாசிப்பு (Seconal Reading) என அழைக்கப்படும்.

அடுத்த நாடாளுமன்ற உறுப்பினர்களால் சட்டமுன்வரைபு பற்றி வாதப் பிரதிவாதங்கள் இடம்பெறும்.

அடுத்து வாக்கெடுப்பு நடைபெற்று சட்டமுன்வரைபு தொடரப்பட வேண்டுமா? என தீர்மானிக்கப்படும். அடுத்து குழுநிலையில் சட்டமுன்வரைபு ஆழமாக ஆராயப்படும். அவ்வாறு ஆராயப்பட்டபின் மூன்றாவது வாசிப்பு (Third Reading) இடம்பெற்று வாக்கெடுப்பு நடைபெறும்.

வாக்கெடுப்பில் பெரும்பான்மையானோர் முன்வரைபினை அங்கீகரித்தால், நாடாளுமன்ற எழுதுவினைஞர் அச்சட்ட முன்வரைபு நிறைவேற்றப்பட்டது என அத்தாட்சி செய்வார்.

இதேநடைமுறை அடுத்த சபையிலும் நடைபெறும். அடுத்த சபையிலும் நிறைவேற்றப்பட்டால் நாடாளுமன்ற எழுதுவினைஞர் அதனை அத்தாட்சி செய்வார்.

அவ்வாறு அத்தாட்சி செய்யப்பட்ட சட்டமுன்வரைபு அரச இசைவுக்கு (Royal assent) அனுப்பப்படும்.

இச்சட்டமுன்வரைபு ஆனது அரசியின் பிரதிநிதியான தேசாதிபதியால் (Governer Geneal) கையொப்பமிடப்பட்டு இசைவுக்கு வழங்கப்படும்.

இதன்பின்னர் ஆஸ்திரேலிய அரசாங்க வர்த்தமானியில் (Gazette) பிரசுரிக்கப்பட்ட குறிப்பிட்ட தினத்தில் இந்தச் சட்டம் வலுப்பெறும்.

அவ்வாறு ஒரு திகதி குறிப்பிடாவிடின் அரச இசைவு (Royal Assent) கொடுக்கப்பட்ட நாளில் இருந்து 28 நாள்களில் அச்சட்டமுன்வரைபு சட்டமாக வலுப்பெறும்.

இதுவே ஆஸ்திரேலியாவில் நியதிச் சட்டம் ஆக்கப்படுகின்ற முறைமை ஆகும்.

அ.முத்துக்கிருஷ்ணன்



# இலவசங்கள்: ஏற்றத்தாழ்வுகளை போக்கும் கருவிகள்

அரசியல் கட்சிகள் தேர்தலின்போது,' இலவசங்கள் அளிக்கப்படும் 'என்ற வாக்குறுதியைத் தரலாமா என்ற விவாதம் இந்தியா முழுவதும் எழுந்திருக்கிறது. தேர்தல் நேரங்களில் அரசியல் கட்சிகள் இலவசங்கள் குறித்து அறிவிக்கக்கூடாது என நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்ட நிலையில் தான் இன்று இந்த விடயம் ஒரு விவாதமாக எழுந்துள்ளது.

காலம் காலமாக மக்களுக்கு அரசு பலவிதமான திட்டங்களை இலவசமாகச் செயற்படுத்தி வருகிறது. மக்கள் நல அரசுகள் உலகம் முழுவதிலுமே பல விடயங்களை இலவசமாகத்தானே கொடுத்து வருகிறார்கள், ஆனால் ஏன் இந்தச் சூழலில் இலவசங்கள் குறித்து இத்தனை பெரும் விவாதமும் வழக்கும் என்ற கேள்வி உங்கள் மனதில் எழலாம்.

குஜராத் மாநிலத்தில் சட்டமன்றத் தேர்தல் விரைவில் நடக்க உள்ளது. அங்கே களத்தில் பாஜக, ஆம் ஆத்மி, காங்கிரஸ் என பல கட்சிகள் தங்களின் வேட்பாளர்களை களமிறக்க உள்ளன. அங்கே சமீபத்தில் சென்ற ஆம் ஆத்மியின் தலைவர் கெஜ்ரிவால் தங்களின் கட்சி ஆட்சிக்கு வந்தால் ஒவ்வொரு வீட்டிற்கும் 300 யூனிட் மின்சாரம் இலவசமாகத் தரப்படும் என்ற அறிவிப்பு வெளியிட்டார், இந்த அறிவிப்பு மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

இலவசங்கள் இந்த நாட்டை சீரழித்து விடும் என்று சமீபத்தில் பிரதமர் மோடி கூறியிருந்தார். அதேபோன்று, இலவசங்கள் மிகப் பெரிய பொருளாதாரப் பேரழிவுக்கு இட்டுச் செல்வதாக இந்திய மத்திய அரசின் வழக்கறிஞர் அண்மையில் நீதிமன்றத்தில் தெரிவித்தார். குஜராத் தேர்தல் தான் இந்த இலவசங்களின் மீதான எதிர்ப்புக்கும் வெறிக்கும் காரணம் என்பதை நீங்கள் இன்னேரம் புரிந்திருப்பீர்கள்.

இதனை ஒட்டி, இலவசங்களைக் கொடுத்து கொடுத்தே தமிழகத்தைச் சிதைத்துவிட்டார்கள் என்கிற குரலும் மேலோங்கியுள்ளது. தமிழகத்தில் 1967 இல் அனைவருக்கும் இலவச கண் சிகிச்சை அளிக்கும் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது. இதனை அடுத்து கை ரிக்‌ஷாவை ஒழித்த போது , அவர்கள் அனைவருக்கும் சைக்கிள் ரிக்‌ஷா இலவசமாக வழங்கப்பட்டது.

தமிழ்நாட்டில் நீதிக்கட்சியின் காலத்தில் இருந்து பள்ளிகளில் குழந்தைகளுக்கு மதிய உணவு இலவசமாக வழங்கப்பட்டது. தமிழகத்தில் ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு கட்சிகளும் இதனை மேலும் மேலும் மெருகேற்றின, ஆனால் அது இன்று இந்தியாவுக்கே வழிகாட்டித் திட்டமாக அமுலில் உள்ளது.

தமிழ்நாட்டில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பாடப்புத்தகங்கள், சீருடைகள், செருப்பு, பேருந்துப் பயணம், சைக்கிள், மடிக்கணினி என அனைத்தும் இலவசமாகவே வழங்கப்படுகின்றன.

1989 ஆம் ஆண்டு முதல் ஏழைப் பெண்களுக்கு திருமண நிதிஉதவி திட்டம் செயற்பாட்டில் உள்ளது. அதன் தொகை 5000 இலிருந்து ,இன்று 50 ஆயிரம் ரூபாயும் எட்டு கிராம் தங்கமுமாக வளர்ந்துள்ளது. 1989 ஆம் ஆண்டு முதல் விவசாய மோட்டார்களுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படுகிறது. 16 லட்சம் விவசாயிகள் இதனால் பயன்பெறுகிறார்கள். நகரங்களில் உள்ள வீடுகளுக்கு முதல் 100 யூனிட் மின்சாரம் இலவசமாக வழங்கப்படுகிறது. 2011 ஆம் ஆண்டு முதல் தமிழகத்தில் அரிசி அட்டை வைத்திருப்பவர்களுக்கு நியாய விலைக் கடைகளின் மூலம் 12 கிலோ அரிசி இலவசமாக வழங்கப்படுகிறது. அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் 2006 ஆம் ஆண்டு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியும், 2011 இல் கிரைண்டர், மிக்சி, மின் விசிறி என்பனவும் இலவசமாக வழங்கப்பட்டன.

பொதுவாகவே எல்லா வசதியும் உள்ளவர்கள், பசியை என்னவென்று அறியாதவர்கள்தான், தொடர்ச்சியாக இலவசங்களுக்கு எதிராக பேசி வருகிறார்கள். அல்லது வெளிநாடுகளில் பெரும் தொகைகளை சம்பளமாகவும் அந்த நாடுகள் கொடுக்கும் அனைத்து இலவசங்களையும் அனுபவிப்பவர்கள் தான், இந்தியாவைப் போன்ற ஒரு மூன்றாம் உலக நாட்டின் வாழ்க்கை தரத்தை அறிந்துகொள்ளாமால் இலவசங்கள் வீண் என்று கண்ணை மூடிக்கொண்டு பேசுவார்கள்.

தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார வளர்ச்சி, அந்த மாநிலத்தை இந்தியாவிலேயே இரண்டாவது வளர்ச்சியடைந்த மாநிலமாக மாற்றியிருக்கிறது. 2003க்கும் 2013 க்கும் இடைப்பட்ட காலகட்டத்தில் மாநிலத்தின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி விகிதம் 9 சதவீதமாக இருந்தது. 2013-14 இல் 80 பில்லியன் டொலர் என்ற வளர்ச்சியை அது எட்டியது. தனிநபர் வருமானம் தொடர்ந்து உயர்ந்தது. 1991 க்கும் 2001 க்கும் இடையில் மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் நாட்டிலேயே மிகக் குறைவாக இருந்தது. எழுதப்படிக்கத் தெரிந்தோர் விகிதம் 80 சதவீதமானது. தனிநபர் வருவாய் 1,14,000 ரூபாவாக உயர்ந்தது.

தமிழகத்தில் செயற்படுத்தப்பட்ட இலவச அல்லது விலையில்லாப் பொருட்கள் / திட்டங்கள் ஒவ்வொன்றும் தமிழகத்தின் மனித ஆற்றலை உருவாக்கும் அடிப்படைத் திட்டங்களாக இருந்தன, அவை மக்களின் வாழ்க்கையை படிப்படியாக மேம்படுத்தின என்பதைக் கிராமப்புறங்களுக்குச் சென்றவர்கள் அறியலாம். சத்துணவு திட்டங்களில் பயன்பெற்ற லட்சக்கணக்கான நம் குழந்தைகள், இலவச பாடப்புத்தகம், சீருடைகள், சைக்கிள், மடிக் கணினி என்று இவைகளின் வழியே தங்களின் வாழ்வை அடுத்த கட்டத்துக்கு நகர்த்திய குழந்தைகள்தான் இன்று இந்தப் பெரும் வளர்ச்சியைச் சாத்தியமாக்கியிருக்கிறார்கள், உலகம் முழுவதும் பெரும் பதவிகளை அலங்கரித்து வருகிறார்கள். தங்களின் குடும்பம், கிராமம், நாடு என்று எல்லாவற்றையும் கடந்து இந்தியாவுக்கு பெரும் அந்நிய செலவாணியையும் சேர்த்து ஈட்டிவருகிறார்கள்.

இந்த இலவசங்களால் மாநிலங்களின் நிதிநிலை மோசமாகி விட்டது என்று பேசுகிறவர்கள் கூட அடிப்படை சமூக பொருளாதார அறிதல்கள் இல்லாமலேயே பேசுகிறார்கள். தமிழகத்தில் இத்தனை ஆண்டுகள் இந்தத் திட்டங்களை செயற்படுத்திய போதும் அடிப்படைக் கட்டமைப்பில் நாம்தான் இந்தியாவின் முதன்மை மாநிலமாகத் திகழ்கிறோம். குஜராத்தை போல் நாம் எப்பொழுதுமே சீனாவின் நகரங்களை, மேம்பாலங்களை, பேருந்து நிலையங்களை, ரயில்வே நிலையங்களை 'போட்டோஷொப்' செய்து காட்டியது கிடையாது. அணைகள், நான்கு வழிச்சாலைகள், பல்கலைக்கழகங்கள், உயராய்வு மையங்கள், பெரும் கனரகத் தொழிற்சாலைகள், துறைமுகங்கள், விமான நிலையங்கள் என தமிழகத்தில் வளர்ச்சி சீரானது, நிலப்பரப்பு எங்கும் அது பகிர்ந்தளிக்கப்பட்ட ஒன்றாகவே உள்ளது.

இன்றைக்கு மத்திய அரசு மாநிலங்களில் வசூலாகும் வரியை முறையாகப் பகிர்ந்தளிக்காமல் பலவிதமான பித்தலாட்டங்கள் செய்கின்றது . ஒவ்வொரு மாநிலத்துக்கும் சேரவேண்டிய வரிப்பணத்தின் பங்கை மத்திய அரசாங்கம் கொடுக்க மறுக்கின்றது. வசூலாகும் வரியில் 41% மாநிலங்களுக்கு கொடுக்கப்பட வேண்டும். ஆனால் மத்திய அரசோ வெறும் 29 வீதத்தை மட்டும் கொடுத்து விட்டு, மீதிப்பணத்தை தங்கள் வசம் வைத்து வருகிறார்கள். அதிலும் மாநில அரசுகள் போடும் திட்டங்களை 'நாங்கள் தான் வழிநடத்துவோம், நாங்கள் தான் இறுதி வார்த்தை கூறுவோம்' என்று கூட்டாட்சி தத்துவத்துக்கே வேட்டு வைத்து வருகிறார்கள்.

வறுமைக் கோட்டின் விளிம்பில் இருப்பவர்கள் அந்தக் கோட்டின் மேலே சென்றதும் கவனித்து, அவர்கள் மேலே செல்லும்போது இலவசங்களை நிறுத்தலாம். இது தான் உலக நடைமுறை. இந்த இலவசங்கள் தொடர்பான விவாதங்கள் சமூக பொருளாதார வரலாற்று புரிதல்களுடன் நடத்தப்பட வேண்டியவையே. இந்த விவாதம் அறிவுசார்ந்து, தகவல்சார்ந்து இருத்தல் வேண்டும். அப்படி 1960 களில் இருந்து தமிழகத்தையும் 2022 இல் உள்ள தமிழகத்தையும் ஒப்பிட்டால் இந்தத் திட்டங்கள் எப்படி இன்றியமையாதவை என்பதை அறிந்துகொள்ள இயலும்.

பொதுவாக இலவசங்களுக்கு எதிராகப் பேசுவது என்பது ஒரு 'பேஷன்'. இந்தியாவின் ஏழை எளிய விவசாயிகளின் கடன்களைத் தள்ளுபடி செய்தால் 'அய்யய்யோ போச்சே 'என்று கூச்சல் போடுவார்கள், 35000 கோடி ரூபாய் அரசு நிதி வீணாகிப் போனது என்று ஓலமிடுவார்கள். ஆனால் கடந்த 20 ஆண்டுகளாக வருடம் ஒன்றுக்கு சுமார் 1,50,000 கோடி ரூபாய் வரித் தள்ளுபடிகளை ஒன்றிய அரசு இந்தியாவின் பெரு முதலாளிகளுக்கும், வெளிநாட்டு முதலாளிகளுக்கும் வழங்கி வருகிறது, அப்படியான தள்ளுபடி அறிவிக்கப்படும் நேரம், இந்த இலவசத்துக்கு எதிரான போராளிகள் தொடர்பு எல்லைக்கு வெளியே சென்றுவிடுவார்கள்.

மோடி ஆட்சிக்கு வந்த பிறகு, இந்தியாவின் கடன் பல மடங்கு உயர்ந்துள்ளது, அவர் மக்களுக்கு எதையும் இலவசமாகக் கொடுக்காமல் எப்படி இந்தியாவின் நிதி நிலை இப்படி மோசமானது? என்பதையும் நாம் சிந்திக்க வேண்டும். ஆனால் அதேவேளையில் அவரது நண்பர் அதானி, உலகின் மூன்றாம் பெரும் பணக்காரராகவும் ஆசியாவின் முதல் பணக்காரராகவும் எப்படி உருவானார்? அதில் அரசின், இந்தியாவின் பொதுத்துறை வங்கிகளின் பங்கு என்ன? மக்களுக்கு இலவசங்கள் என்றவுடன் பொங்கி எழும் போராளிகள் யாராவது, அதானிக்கு வழங்கப்பட்ட இலவசங்கள், தள்ளுபடிகள் என்னென்ன என்ற பட்டியலுடன் வருவார்கள் என்று காத்திருக்கிறேன்.






"OM" ASTROLOGY CENTRE
MASTER: ADITHYA SHARMA


வாழ்க்கையின் நம்பிக்கை
உங்கள் புதிய வாழ்க்கை, புதிய நாளுக்கு ஹலோ சொல்லுங்கள்
உங்கள் புதிய மகிழ்ச்சியை ஏற்றுக்கொள்ளுங்கள்

சூனியத்தை 100% அகற்றுவதற்காக,
துரதிர்ஷ்டம் மற்றும் தீய ஆவிகளிடமிருந்து பாதுகாக்க நாடுங்கள்

அனைத்து மதத்தவர்களும் வரவேற்கப்படுகின்றனர்

விருப்பத்திற்குரியவற்றை மீண்டும் அழைத்து வருவதில் வல்லுநர்

அனுபவம் வாய்ந்தவரின் கைரேகை பார்த்தல், முக வாசிப்பு, எண் கணிதம்,
புகைப்பட வாசிப்பு, ஜாதகம் மற்றும் அதிர்ஷ்ட எண்கள் பார்வை



அனைத்து பிரச்சினைக்கும் இங்கே தீர்வு உண்டு

- ஆரோக்கிய பிரச்சினை
- கணவன் - மனைவி
- கல்விப் பிரச்சினை
- குடும்ப விவாதம்
- பொறாமை, சாபம்
- எதிரிகள் போன்ற...
- திருமண பிரச்சினை
- உறவுமுறை
- விவாகரத்து
- நிதி மற்றும் வியாபாரம்
- பில்லி சூனியம்
- காதல் பிரச்சினை
- குழந்தயின்மை
- தீய பார்வை
- தொழில் மற்றும் பணப்பிரச்சினை
- இருண்ட கனவு



அனைத்து பிரச்சினைகளுக்கும் இங்கே தீர்வு உண்டு

CALL FOR AN APPOINTMENT 0416 276 663

St Alband, Vic 3021 Email : adithyasharma138@gmail.com

PRAVATE & CONFIDENTIAL

CEYLON EXPRESS

MONEY TRANSFER

- Best Rates Guarantee
- Same Day Bank Transfer
- Responsible Customer Support
- Easy, Quick Internet Money Transfer



127, Walker st, Dandenong | CONTACT : OSMAN 0402 396 052

# தெற்கு ஆஸ்திரேலியாவில் ஒரு குதிரை சவாரி ‘விக்டர் ஹார்பர்’

**நெ செ பரத்**

அலுவலகத்தில் என்னோடு பணிபுரியும் நண்பர் ஒருவரின் மேஜை மேல் இருந்த சிறிய பயணசீட்டொன்று என் கண்ணைக் கவர்ந்தது. பச்சை நிறத்தில் இருந்த அந்தப் பயணச்சீட்டின் மேல் குதிரை வண்டி போல் ஒரு படம் பொறிக்கப்பட்டிருந்தது. மனதில் ஒட்டிக்கொண்ட அந்த இடத்தை பார்த்துவிட வேண்டும் என்று அவரிடம் எல்லாத் தகவலையும் விசாரித்து நம் தெற்கு ஆஸ்திரேலிய சுற்றுலா பயணத்தின் ஒரு அங்கமாக நாம் வந்துள்ள இடம் தான் “விக்டர் ஹார்பர்”. தெற்கு ஆஸ்திரேலியாவின் தலைநகர் அடிலெய்ட் நகரின் தெற்கே சுமார் 80 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள இந்த விக்டர் ஹார்பரின் சிறப்பு அம்சம் குதிரையால் இழுத்து செல்லப்படும் “ட்ராம்” தான். இரட்டை அடுக்குகள் கொண்ட ஒற்றைப் பெட்டியாலான இந்த ட்ராமில் சவாரி செய்ய நாமும் மிகுந்த ஆர்வத்துடன் காத்துக்கொண்டு இருந்தோம். நாங்கள் சென்றது கோடைகாலம் என்பதால் சுற்றுலாப் பயணிகளின் கூட்டம் அதிகமாக இருந்தது. அதனால் ட்ராமில் செல்ல நீண்ட வரிசையில் நாமும் இணைந்தோம். வண்டி ஏறும் வரையில் வாருங்கள், வரலாற்றைப் புரட்டலாம்.






இந்தப் பகுதியை முதன் முதலில் பிரித்தானியர்கள் கண்டுகொண்டதே ஒரு சுவாரசியமான நிகழ்ச்சி தான். 1802 ஆம் ஆண்டு “எச். எம் .எஸ். இன்வெஸ்டிகேட்டர்” என்ற



கப்பலில் பிரித்தானியக் குழு ஒன்று மேத்தியூ பிலிண்டெர்ஸ் என்ற மாலுமியின் தலைமையில், ஆஸ்திரேலியாவின் எல்லைப் பகுதிகளை மதிப்பாய்வு செய்யும் பொருட்டு அனுப்பிவைக்கப்பட்டது. அதே சமயம் நீர்க்கோலாஸ் பாவ்டின் என்ற பிரெஞ்சு மாலுமி இந்தப் பகுதியில் “லே ஜியோகிராபேய” என்ற கப்பலில் வந்து, இந்தப் பகுதியை மதிப்பாய்வு செய்து கொண்டு இருந்தார் . அந்தச்சமயம் அவர் மேத்தியூ பிலிண்டர்ஸைச் சந்தித்தார். அதன் பின் இருவரும் இணைந்து செயற்பட்டனர். அவர்கள் இருவரும் சந்தித்த அந்தப் பகுதிக்கு “என்கவுண்டர் பே” (எதிர்ப்படுதல் விரிகுடா) என்று பெயர் சூட்டினர்.

பின்னாட்களில் 1837-ஆம் ஆண்டு “எச். எம். எஸ். விக்டர்” என்ற கப்பலில் இந்த பகுதி வழியாக வந்த ரிச்சர்ட் க்ரோசியர் என்ற பிரித்தானிய மாலுமி, அந்தப் பகுதியில் இருந்த க்ரானைட் தீவின் மறுபுறத்தில் இருந்த கரைக்கு தன் கப்பலின் நினைவாக “விக்டர் ஹார்பர்” எனப் பெயரிட்டார். இவ்வாறாக வரலாற்று பெயர்க் காரணங்கள் சில சமயம் சுவாரசியமாகவும், விசித்திரமாகவும் அமைந்திருக்கத்தான் செய்கின்றன. சில ஆண்டுகளுக்கு பின்னர் இந்த க்ரானைட் தீவை ஒட்டிய கடலுக்கு அருகே திமிங்கிலத்தைப் பதப்படுத்தும் இரண்டு பணிமனைகள் நிறுவப்பட்டன. குறிப்பாக திமிங்கிலத்தில் இருந்து தயாரிக்கப்படும் எண்ணெய் பல்வேறு இடங்களுக்கு அதிகமாக ஏற்றுமதி செய்யப்பட்டது. அந்த எண்ணெயை அக்கரைக்கு எடுத்துச் செல்லும் பொருட்டு ஒரு 3 கிலோமீற்றர் நீளமான பாலம் அமைத்து, அதில் தண்டவாளங்கள் அமைக்கப்பட்டு, அதன் மேல் ஒரு சிறிய ட்ராமில் எண்ணெய் கொண்டு செல்லப்பட்டது. அப்படி ஆரம்பித்த இந்த ட்ராமை இழுத்துச் செல்ல குதிரைகள் பயன்படுத்தப்பட்டன. பல வருடங்களுக்கு பின்னர் அங்கு ஏற்றுமதி நிறுத்தப்படவே, இந்த ட்ராம் சுற்றுலாப் பயணிகளை க்ரானைட் தீவுக்கு ஏற்றி செல்ல இன்றளவும் பயன்பாட்டில் உள்ளது.

“கிலைடெஸ்டேல்” என்ற ஸ்காட்லாந்தின் தனிரகக் குதிரைகள் மட்டும் தான் இந்த ட்ராமை இழுக்க பயன்படுத்தப்படுகின்றன. நான் இன்று கண்ட குதிரை இளம் செம்மண் நிறத்திலும் அதன் முன்பகுதி வெள்ளை நிறத்திலும் இருந்தது. தூரத்திலிருந்தே அதன் பொலிவு நமக்கு தெரிந்தது. சுமார் 750 கிலோ எடையுள்ள இந்த கிலைடெஸ்டேல் வகை குதிரைகள் கம்பீரமாக அந்த ட்ராமை இழுத்துச்செல்வதே ஒரு தனி அழகு தான். 40 பயணிகள் வரை இந்த ட்ராமில் சவாரி செய்ய, இந்தக் குதிரை எத்தனை சிரமப்படுமோ? என்று நீங்கள் எண்ணலாம். ஆனால் தண்டவாளங்களில் இந்த ட்ராம் இழுத்துச்செல்லப்படுவதாலும் , அந்த ட்ராமில் உள்ள உருளைக் கப்பிகளின் (Pulley) வடிவமைப்பினாலும் இந்தக் குதிரைகள் மேல் அழுத்தம் குறைவாகத்தான் இருக்குமாம். அது போக இந்த 3 கிலோமீற்றர் பாதையில் ஒவ்வொரு முறை பயணித்து திரும்பி வந்த பின்னரும் குதிரைகள் மாற்றப்படுகின்றன. அங்கிருந்த குதிரை லாயத்தில் மொத்தமாக 5 குதிரைகளை நாம் கண்டோம் .

குதிரைகளை மிகுந்த அக்கறையுடன் பராமரிக்கிறார்கள் என்பது அவற்றின் தோற்றத்தை வைத்தும், அங்கே உள்ள பராமரிப்பாளர்கள் குதிரைகளுடன் வாஞ்சையுடன் பழகுவதை வைத்தும் நாம் உணரலாம். அங்கே பராமரிப்பாளர் ஒருவர், குதிரையொன்றின் ரோமங்களை மிக லாவகமாக சீவிக்கொண்டு இருந்தது கண்ணுக்கு விருந்தாக அமைந்தது. ஒரு வழியாக நாமும் ட்ராமில் ஏறும் தருணம் வந்தது. இரட்டை அடுக்கு பெட்டி இருந்தால் அதன் மேலடுக்கில் ஏறி அமர்வது தானே உசிதம் (!) என்று நாங்களும் சிறுவர்களாக மாறி துள்ளலுடன் ஏறி அமர்ந்தோம். ஒவ்வொருவராக ஏறி அமர்ந்து இடம்





நிரம்பியவுடன் ட்ராம் மெதுவாக நகர்ந்தது. மேலடுக்கில் கூரை இல்லாததால் நாமும் “புதிய வானம், புதிய பூமி” என்று அங்கிருந்த மலை மற்றும் கடற்பகுதியை ரசித்தோம். அடர் நீலமான அந்தக் கடல் அப்பழுக்கின்றி அமைதியாக காணப்பட்டது.

விக்டர் ஹார்பாரின் கரையிலிருந்து க்ரானைட் தீவு வரையிலான இந்தப் பாலத்தில் நம் ’ட்ராம்’ சென்று, அதே பாதையில் திரும்பி விக்டர் ஹார்பரை வந்தடையும். மெதுவாகக் குதிரை நடக்க, எங்கள் ட்ராமும் அதே வேகத்தில் முன்னோக்கி நகர்ந்தது. பொதுவாக சீறிப்பாயும் குதிரை வண்டிகள் போல் இல்லாது மிதமாகச் செல்வதால் நம்மால் பாலத்தின் இருபுறமும் உள்ள காட்சிகளையும் ரசிக்க முடிகிறது. மெல்லிய காற்றும் நம்மை வருடியது. கரையை விட்டு நாம் முன்னோக்கிச் செல்ல செல்ல, ஒரு குறுகிய பாலத்தில் ஒரு குதிரையின் பயிற்சியையும் அதன் ஓட்டுநரின் திறனை மட்டுமே நம்பி நாம் கடலின் மேல் பயணிக்கிறோம் என்ற உணர்வு சற்றே மிரட்சியைத் தந்தபோதிலும் , வரலாற்றுச் சுவடுகளில் நாமும் ஒரு அங்கமாகிவிட்டோம் என்ற எண்ணம் மட்டுமே மேலோங்கி இருந்தது. சுமார் 45 நிமிடங்களுக்குள் சென்று திரும்பும் இந்த ட்ராம் பயணம் வரலாற்றின் களஞ்சியம் என்றால் அது மிகையல்ல. வேகமாக ஓடிக்கொண்டிருக்கும் இன்றைய வாழ்க்கைச் சூழலில் “மிதம்” எவ்வளவு அவசியம் என்பதை இந்த ட்ராம் பயணம் நமக்கு உணர்த்தியது.

15 வெள்ளிகள் கொடுத்து வாங்கிய அந்த பச்சை வண்ண பயணசீட்டை நாமும் பத்திரமாக வைத்துக்கொண்டோம். இனி வந்தபாதையில் திரும்பி செல்ல நாங்களும் தயார் .

‘நெஞ்சம் உண்டு நேர்மை உண்டு ஓடு ராஜா..நேரம் வரும் காலம் வரும் ஆடு ராஜா..!’

**(பயணங்கள் முடிவதில்லை...)**


தாயக கலாசார
ஆபரணங்கள்
மெல்போர்ணில்...
லக்கி
நகைத் தொழிலகம்
LUCKY JEWELLERY
பொன்னுருக்குதல்
தாலி செய்தல்
கல்யாண மோதிரம்
காது குத்துதல்
தமிழ் எழுத்துகளில் ஆபரணங்கள்
திருத்த வேலைகள் உடனடியாக
14/38 Mccrae Street, Dandenong VIC3175
luckysankaran@gmail.com
LuckyJewelleryMelborne
0387121974, 0415233284

# சாமியாடுதல் அற்புதமா? உளவியல் பிரச்சினையா?

**சாமியாடுதல் அல்லது கலையாடுதல் என்பதை பலரும் பக்திபூர்வமாகவே நோக்குகின்றனர். ஆனால் உண்மையிலேயே இவ்வாறான கலையாடுதல்/சாமியாடுதல் என்பது ஒரு உளவியல் சார் பிரச்சினை என்பதை 'எதிரொலி'க்கு வழங்கிய நேர்காணலில் விளக்குகின்றார் மனோதத்துவ நிபுணர் மருத்துவர் ரைஸ் அவர்கள்.**

**கேள்வி: கிராமங்களில் நாம் பார்க்கும் சாமியாடல் என்பது ஒரு ஆன்மீக அதிசயமா? அல்லது உளவியல் பிரச்சினையா?**

பதில்: ஆம், அது ஒரு வகையான மெலிதான உளவியல் பிரச்சனை தான். இதனை ஆங்கிலத்தில் Trance and possession disorder எனச் சொல்வர். நன்றாகக் கவனித்தீர்கள் என்றால் உங்களுக்குப் புரியும், எல்லோருக்கும் சாமி வருவதில்லை. பொதுவாக கிராமத்திலுள்ள பெண்களுக்குத் தான் இது அதிகமாக வருகிறது. அதுவும் தங்களது சொந்த வாழ்க்கையில் ஏதாவது பிரச்சினைகளோ, அழுத்தங்களோ உள்ளவர்களுக்குத் தான் இது வருகிறது. மனநலம் பற்றிய இழிவான எண்ணம் இருப்பதாலும் மன உணர்ச்சிகளை எளிதில் வெளிப்படத்தக்கூடிய கற்பிதமும் கலாசாரமும் வெளியும் இல்லாததால் சாமியாடுவது என்பது இவர்களின் ஒருவித 'வெளிப்பாடு' என்றே கொள்ளவேண்டும்.

திருவிழாக்களில் பலர் சாமியாடுவதைப் பார்த்து வளர்வது,சாமியாடுபவர்களுக்குக் கிடைக்கும் தற்காலிக மரியாதையை அவதானிப்பது, சமுதாயத்தில் சாமியாடுதல் என்பது ஏற்றுக் கொள்ளப்படும் நிலை, சாமி தனது கஷ்டங்களைத் தீர்த்து வைக்கும் எனும் நம்பிக்கை எனும் பல காரணங்களால் சில பேருக்கு இது ஒரு ஏற்றுக் கொள்ளப்பட்ட 'வெளிப்பாடாக' அமைந்து விடுகிறது. ஆனால் இது ஒரு தற்காலிகத் தீர்வு தான். என்ன தான் சாமி ஆடி, சிறிது ஆறுதல் கிடைத்தாலும் அன்றாட வாழ்வில் அவர்களின் பிரச்சினைகள் நல்ல தீர்வு கிடைக்கும் வரை , தொடரத் தானே செய்யும்!

**கேள்வி: இதற்கு என்ன தான் தீர்வு?**

பதில்: மனநல ஆலோசனை தான் தீர்வு. வீட்டில், குடும்பத்தில் ஏதாவது பிரச்சினை என்று இருந்தால் எல்லோரும் ஆலோசனையில் கலந்து கொண்டு ஒன்றாக தீர்வு காண்பது தான் நலம்.

**கேள்வி: சாமியாடுதல் இலங்கை,இந்தியா போன்ற நாடுகளில் மட்டும் தான் உள்ளதா? அல்லது மேலை நாடுகளில் காணப்படுகிறதா?**

பதில்: இல்லை. அவர்களுக்கு இது பற்றிய கற்பிதம் இல்லாததாலும் இதில் நம்பிக்கை இல்லாததாலும் இது போல உள்ள வித்தியாசமான அறிகுறிகள் மேலை நாடுகளில் இல்லை. ஆனால் பல காரணங்களால் சாமியாடும் இதே மக்கள் இலங்கையிலிருந்தோ, இந்தியாவில் இருந்தோ மேலை நாடுகளுக்கு குடிபெயர்ந்தால் அவர்களுக்கும் 'சாமியாடல்' வருவதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

**கேள்வி: இது போல உள்ள அறிகுறிகளோ வெளிப்பாடுகளோ இந்து மதத்தினரைத் தவிர்ந்த பிற மதத்தவர்களிடமும் காணப்படுகின்றனவா?**

பதில்: பொதுவாக ஆபிரிக்க நாடுகளில் இது போல சில 'வெளிப்பாடுகள்' இருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறோம். இந்தியாவிலும், இலங்கையிலும் கிறிஸ்தவர்களில் ஒரு பிரிவினர் கூட்டமாக இருக்கும் போது மதபோதகர் சத்தமாக சில வசனங்களை சொல்லி




அவர்களின் மனதை தூண்டும் போது, எல்லோரும் சேர்ந்து ஒரே மாதிரி ஆடுவார்கள், சிலர் மயங்கி விழுவர். அது போல செய்வினை போன்ற விடயங்களில் நம்பிக்கை உள்ள சில முஸ்லிம்கள் தங்களுக்குள் 'ஜின்' எனும் கெட்ட ஆவி புகுந்துவிட்டதாக நம்பி ஒரு விநோதமான உடல் மொழியோடு, தமது தன்மையில் இருந்து விலகி வித்தியாசமாக நடந்துக் கொள்வார்கள். சிறிது நேரம் கழித்து சகஜமாக இயல்பு நிலைக்கு வந்து விடுவார்கள். இதுவும் , மூடநம்பிக்கை கொண்ட முஸ்லிம்களுக்கு மட்டும் தான் நடக்கும், மற்றவர்களுக்கு நடக்காது.

**கேள்வி: டாக்டர் , அப்படியென்றால் இந்த செய்வினை போன்ற விடயங்கள் வெறும் மூடநம்பிக்கை எனச் சொல்கிறீர்களா?**

பதில்: ஆம் நிச்சயமாக! இதற்கு எந்த வித அறிவியல் அடிப்படையும் இல்லை, ஆதாரமும் இல்லை. இது சுத்தமான கடைந்தெடுத்த மூட நம்பிக்கை. அது உண்மை என்றால் உலகில் போர் எதற்கு? சமாதானம் எதற்கு? ஒருவருக்கொருவர் மாறி மாறி செய்வினை செய்து மாய வேண்டியது தானே?



எதிரொலி
ஆஸ்திரேலியா ETHIROLI
புரட்டாதி 2022

# நம்பிக்கை

சிறுகதை

மெல்லிய சத்தத்தில், சீர்காழி பின்னணியில் பாடிக் கொண்டிருக்க, கோயிலின் படியைக் கடந்து உள்ளே நுழைந்தாள் சிந்து. கோயிலுக்கு வந்திருக்கும் பெண்மணி என்றதும் சிந்துவை நடுத்தரப் பெண்மணியாகக் கருதியிருந்தால், அது உங்கள் தவறு. சல்வார் அணிந்து மெல்லிடையாளாக, தூக்கிப் போட்ட முடியுடன் அழகுக்கு தானே இலக்கணம் என்று சொல்லாமல் சொன்ன சிந்து, சென்ற வருடம் தான் சட்டப்படிப்பை முடித்து விட்டு வழக்கறிஞராக வேலை செய்யத் தொடங்கியிருக்கிறாள்.

முதலில் தாயார் மாலாவின் பலவந்தமான அழைப்பில் கோயிலுக்கு வந்து போனவள், இப்போது மாதமொரு முறையாவது தானாகவே கோயிலுக்கு வரத் தொடங்கியிருக்கிறாள். வணங்குவதை விட கோயில் தொண்டு வேலைகளில் பங்கெடுத்துக் கொள்வதே அவளுக்கு அதிகம் பிடித்திருந்தது. அத்தோடு நின்று விடாமல் பக்கத்தில் உள்ள முதியோர் இல்லத்தில் இருந்து, முதியோர்களைப் பொறுப்பாக அழைத்துச் சென்று தரிசனம் செய்ய வைத்து, திரும்ப அழைத்துச் சென்று விட்டு விடுவாள். அப்படிச் சென்றபோது அறிமுகமானவர்கள் தான் கலா-ஜீவா தம்பதியினர். பழகுவதற்கு இனிமையான இருவரும் எழுபது வயதைத் தொட்டிருந்தார்கள்.



அவர்களின் மகன் பக்கத்து மாநிலத்தில் வாழ்ந்து வருகிறார். ஆறுமாதத்துக்கொரு முறை பெற்றோரை வந்து பார்ப்பார். தொலைபேசியில் சுகநலம் விசாரித்துக் கொள்வார். கலா, அந்தக் காலத்து மனைவிகளுக்கு வரைவிலக்கணம் என்று கூறக் கூடியவர். கணவனே கண் கண்ட தெய்வம் என்று வாழ்பவர். கணவன் உண்ணாமல் ஒரு சொட்டு நீர் கூட அவர் தொண்டையைத் தாண்டியிருக்காது. சக்கர நாற்காலியில் உட்கார வைத்து தானே கணவனைத் தள்ளிக் கொண்டு வருவார். தமக்கும் பிள்ளைக்கும் அர்ச்சனை செய்து திருநீற்றைக் கணவனின் நெற்றியில் "சிவ சிவ" என்று சொல்லி பக்தியும் வாஞ்சையும் பெருகப் பூசி விடுவார்.

ஜீவாவும் பாசம் காட்டுவதில் குறைந்தவரல்லர். முன்னர் ஒருகாலத்தில் அவர் கடும் கோபக்காரரர் என்று கலா சொல்லியிருக்கிறார். சக்கர நாற்காலியில் முடங்கி விட்ட தன்னை, மனைவி தள்ளிக் கொண்டு திரிவதில் அவருக்கு வருத்தமே. இப்போது ஞாபகமறதி வியாதியும் ஜீவாவுக்கு வந்து விட்டிருந்தது. மறதி என்றால் எல்லாவற்றையும் மறப்பதல்ல. தனிமை கொஞ்சம் நீண்டு விட்டால் அவர்கள் இன்னொரு உலகத்தில் இன்னொரு கதாபாத்திரமாக வாழ்வார்கள். அதை நிஜம் என்றே நம்பி இருப்பார்கள். அந்த வியாதிக்கு வைத்தியர் ஏதோ பெயரும் சொல்லியிருந்தார்.

நடக்க முடியாத நிலையில் கூட காரில் போய் படம் பார்த்து விட்டு, அப்போது தான் திரும்பி வந்ததாக ஜீவா சொல்வார். அக்காவின் மகளின் திருமணம் என்று சொல்லியிருந்தால், அதற்கும் போய் விட்டு வந்தேன் என்று கதை சொல்வார். கலா அன்ரியும் மறுத்துப் பேசாமல் அவர் போக்குக்கே தாமும் சேர்ந்து பேசுவார். எந்தக் கற்பனை உலகில் சஞ்சாரித்தாலும் உயிரோடு கலந்து விட்டிருக்கும் மனைவியை மட்டும் அவர் என்றும் மறந்து விடவில்லை.

முதிய தம்பதியர் ஒருவரையொருவர் கவனித்துக் கொள்ளும் அழகே தனி. முகத்தைப் பார்த்தே ஒருவரின் உணர்வுகளை மற்றவர் புரிந்து கொள்ளுவதைப் பார்த்து சிந்து ஆச்சரியப்பட்டிருக்கிறாள். மாறி மாறி "செல்லம், குஞ்சு, என்னடா, ராசா" என்றுதான் அழைத்துக் கொள்வார்கள்.

வெள்ளைக்காரரர்கள் மாறி மாறி விவாகரத்து என்று வருவதும், நினைத்தவுடன் ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்து போவதும், இன்னொருவரை உடனடியாகவே துணைவராக ஏற்றுக் கொள்வதும், சேர்ந்து வாழ்ந்தவரைக் கொலை பண்ணுவதுமான வழக்குகளைப் பார்த்து, சிந்துவுக்கு திருமணம் என்ற வார்த்தையே கசந்து போயிருந்தது. இருமனம் இணைந்த பந்தம் என்பதே அர்த்தமற்றதாகத் தோன்றியது. பெற்றோர் அந்தப் பேச்சை எடுக்கும் போதெல்லாம் கடுமையாகப் பேசி அதற்கு முற்றுப்புள்ளி வைத்து விடுவாள். போலியான ஒரு உறவுக்குள் கட்டுண்டு வாழ்க்கை முழுவதுக்கும் கஷ்டப்பட முடியாது என்பது அவளது தீர்மானம். ஆனால் இந்தத் தம்பதியைப் பார்க்கும் போது, இப்படி ஒரு வாழ்க்கைத்துணை அமைந்து விட்டால் வாழ்க்கை சொர்க்கமாக இருக்குமே என்று தோன்றத் தொடங்கி இருந்தது. அவளின் "திருமணம் வேண்டாம்" என்ற முடிவும் ஆட்டம் காணத் தொடங்கியிருந்தது.

நினைவுகளுடன் பயணித்ததில் வீடு வந்து விட்டிருந்தது. வீட்டுக்குள் நுழைந்து ஒரு நிமிடத்துள், தாயார் சுந்தரி கோப்பிக் கப்புடன் அறையுள் நுழைந்தார். அரை மணி நேர வாதப் பிரதிவாதங்களின் பின் சுந்தரி தான் வந்த வேலையை வெற்றிகரமாக முடித்துக் கொண்டார்.

பெற்றோர் பார்த்திருந்த மணமகனுடனான முதலாவது தொலைபேசி உரையாடலிலேயே சிந்துவுக்கு அமரேஷைப் பிடித்துக் கொண்டு விட்டது. ஜீவா அங்கிளையும் கலா அன்ரியையும் போலத் தாமும் வயோதிபத்தில் ஒருவருக்கொருவர் அனுசரணையாக வாழ வேண்டும் என்றெல்லாம் கற்பனைகள் வரத் தொடங்கி விட்டிருந்தன. இணை பிரியாமல் வாழ்ந்து, அந்த நினைவுகளுடனேயே மடிந்து விட வேண்டும் என்ற ஆசையும் துளிர் விட்டிருந்தது. சிந்துவின் கல்யாண ஏற்பாடுகள் மிகத் தீவிரமாக நடந்து கொண்டிருந்தன. அமரேஷை நேரில் பார்த்ததும், சிந்துவுக்கு இன்னமும் பிடித்துக் கொண்டு விட்டது. அவனுடன் கழிக்கும் நேரங்கள் அதிகமாகியதில் முதியோர் இல்லப்பணியைத் தற்காலிகமாக மறந்து விட்டிருந்தாள்.

திருமண அழைப்பிதழ் கிடைத்ததும் அதை எடுத்துக் கொண்டு போய் அந்த உதாரணத் தம்பதியினரிடம் ஆசி வாங்க வேண்டும் என்றே சிந்து நினைத்திருந்தாள். அவளின் வாழ்க்கைத் தீர்மானத்தை மாற்றி விட்ட தம்பதியர் ஆயிற்றே. கோயிலுக்குப் போன போதுதான் கலா அன்ரி ஒரு வாரத்தின் முன்னர் மரணமடைந்து விட்டது தெரியவர சிந்து துடித்தே போனாள். ஓருயிர் ஈருடலாய் வாழ்ந்த ஜீவா அங்கிள் எப்படித் தாங்கிக் கொண்டார்? என்றே சிந்துவின் மனது பெரிதும் வேதனைப்பட்டது.

கலங்கிய மனதுடன் போய் இறங்கியவளை இல்லத்திலிருந்தவர்கள் வரவேற்றார்கள். ஜீவா இப்போதெல்லாம், தன் கற்பனை உலகத்தில் தான் அதிகம் வாழ்கின்றார் என்று சொல்லி வருத்தப்பட்டார்கள். படபடக்கும் இதயத்துடன் கதவைத் திறந்தவளை ஜீவா அடையாளம் கண்டு கொண்டார்.

"சிந்து" என்று உரிமையோடு கூப்பிட்டார்.

"அங்கிள் எப்படி இருக்கிறீர்கள்?" கைகளைப் பிடித்து வருடியபடி கண்களில் கண்ணீருடன் சிந்து கேட்டாள்.

"சுகமா இருக்கிறன். என்ர முதற்பொண்டாட்டி செத்துட்டா தெரியுமோ? இரண்டாவதா கட்டினவா சாப்பாடு கொடுத்து விட்டிருந்தா. இப்பத்தான் சாப்பிட்டேன். நல்ல சாப்பாடு. அவா சமையலில் நல்ல கெட்டிக்காரி"

சிந்து கதறி அழுத சத்தம் கேட்டு இல்லத்தவர்கள் ஓடி வந்தார்கள். கலா அன்ரியின் இறப்புக்காகவும், அங்கிளின் நிலையை எண்ணியும் சிந்து அழுவதாக அவர்கள் நினைத்துக் கொண்டதில் தப்பு ஒன்றும் இல்லையே.

# மாதக ராசிபலன்



## மேடம்

கடின உழைப்பினால் வாழ்க்கையில் முன்னேறும் மேஷ ராசியினரே, உங்களுக்கு திடீரென்று வரும் கோபத்தைக் கட்டுப்படுத்தினால் வெற்றி நிச்சயம். இந்த மாதம் புத்திக் கூர்மையுடன் செயல்களை செய்து எதிலும் வெற்றி பெறுவீர்கள்.

தொழில் வியாபாரம் தொடர்பாக பயணங்கள் சென்று வரவேண்டி இருக்கும். குடும்பத்தில் இருப்பவர்களுடன் வாக்கு வாதத்தில் ஈடுபடாமல் அனுசரித்துச் செல்வது நல்லது. மருத்துவம் தொடர்பான செலவும் ஏற்படலாம். கலைத்துறையினர் படிப்படியான வளர்ச்சியைக் காண்பீர்கள். மாணவர்கள் கல்வியில் மேன்மை அடைய, கூடுதல் கவனத்துடன் படிப்பது அவசியம்.

## கடகம்

எப்போதும் ஒரே கருத்தைக் கொள்ளாமல் அவ்வப்போது எண்ணங்களையும் கருத்துக்களையும் மாற்றிக் கொள்ளும் குணமுடைய கடக ராசியினரே, நீங்கள் எளிதில் உணர்ச்சிவசப்படக் கூடியவர்கள். இந்த மாதம் தொழில் தொடர்பான விஷயங்களில் தீர ஆலோசித்து ஒரு முடிவுக்கு வருவீர்கள். பலராலும் செய்ய முடியாத காரியங்களை வெற்றிகரமாக முடிக்கும் நிலை வரலாம். குடும்பத்தில் இருப்பவர்களால் கூடுதல் வருமானம் கிடைக்கும். கலைத்துறையினருக்கு சாதகமான முன்னேற்றம் ஏற்படப்போவது உறுதி. நல்ல அறிமுகம் கிடைக்கப் பெற்று முன்னேற்றம் உண்டு. மாணவர்களுக்கு பாடங்கள் படிப்பதில் ஆர்வம் உண்டாகும்.

## துலாம்

எதையும் எதிர்த்து நின்று சமாளிக்கும் திறமை உடைய துலாம் ராசியினரே, உங்கள் மனம் குழப்பம் இன்றி தெளிவாக இருக்கும். இந்த மாதம் நண்பர்களுடன் சேர்ந்து செய்யும் காரியம் சாதகமான பலன் தரும். தொழில், வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் பங்குதாரர்களுடன் ஆலோசனை செய்து வியாபாரத்தை மேற்கொள்வது கூடுதல் லாபம் கிடைக்க வழிசெய்யும். குடும்பத்தில் இருப்பவர்களிடம் அனுசரித்து நடந்து கொள்வது அமைதியைத் தரும். கலைத்துறையினருக்கு நன்மைகள் நடக்கும் காலமிது. அரசியல்வாதிகள், மேலிடத்தின் ஆதரவைப் பெறுவீர்கள்.

## மகரம்

எந்த ஒரு வேலையையும் நுணுக்கமாகச் செய்து மற்றவர்களின் பாராட்டை பெறும் மகர ராசியினரே , இந்த மாதம் பல்வேறு நன்மைகள் உண்டாகும். கடினமான பணிகளையும் செய்து முடிக்கும் துணிச்சல் ஏற்படும். தொழில் ,வியாபாரம் வேகம் பிடிக்கும். வியாபாரம் பற்றி மனதில் இருந்த கவலை நீங்கி தைரியம் உண்டாகும். கலைத்துறையினருக்கு விருதுகள் கிடைக்கும். புதிய வாய்ப்புகள் கிடைக்கும். அரசியலில் உள்ளவர்களுக்கு அனுகூலம் கிடைக்கும். மாணவர்களுக்கு பாடங்கள் படிப்பது மனதில் மகிழ்ச்சியை உண்டாக்கும். தேர்வில் அதிக மதிப்பெண் பெறும் குறிக்கோளுடன் செயற்படுவீர்கள்.

## இடபம்

எந்த நிலையிலும் அடுத்தவர் பற்றி ரகசியங்களை வெளியே சொல்லாமல் மனதில் வைத்துக்கொள்ளும் இயல்புடைய ரிஷபராசியினரே, இந்த மாதம் எந்த ஒரு காரியமும் வெற்றியடைவதுடன் லாபகரமாகவும் இருக்கும். பணவரத்து அதிகரிக்கும். தொழில், வியாபாரம் முன்னேற்றம் ஏற்படும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

கலைத்துறையினருக்கு ஓரளவு முன்னேற்றம் கிடைக்கும். மாணவர்களுக்கு பாடங்களை மனநிறைவுடன் படிப்பீர்கள். கூடுதல் மதிப்பெண் பெற மேற்கொள்ளும் முயற்சிகள் வெற்றியடையும்.

## சிம்மம்

கம்பீரமான தோற்றத்தை உடைய சிம்ம ராசியினரே, நீங்கள் சுறுசுறுப்பாகவும் அடுத்தவரை அடக்கி ஆளும் திறமையும் பெற்று இருப்பீர்கள். இந்த மாதம் ராசியில் குரு - மனதில் தெளிவு உண்டாகும். ஆக்கபூர்வமான யோசனைகள் தோன்றும். தொழில் வியாபாரம் தொடர்பான முயற்சிகள் சாதகமான பலன் தரும். குடும்பத்தில் இருப்பவர்களிடம் தன்மையாகப் பேசிப் பழகுவது நல்லது. கலைத்துறையினருக்கு பகீரதப் பிரயத்தனம் செய்வதன் மூலமாகவே நல்ல முன்னேற்றம் ஏற்படும். அரசியல்வாதிகள் வீட்டைவிட்டு வெளியே தங்க நேரிடலாம். பதவிகளில் முன்னேற்றம் உண்டாகும் காலமிது. மாணவர்கள் கல்வியில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

## விருச்சிகம்

அறிவும், ஆற்றலும் ஒருங்கே பெற்ற விருச்சிக ராசியினரே, நீங்கள் பிடிவாத குணத்தை தளர்த்திக் கொண்டால் எதிலும் வெற்றி நிச்சயம். இந்த மாதம் புத்தி கூர்மையுடன் எதையும் செய்வீர்கள். எதிர்காலம் தொடர்பான திட்டங்கள் மனதில் தோன்றும். எதையும் முன்னேற்பாட்டுடன் செய்வீர்கள். தொழில் வியாபாரம் தொடர்பான விஷயங்கள் சாதகமாக நடந்து முடிய திறமையாகச் செயற்படுவீர்கள். அரசியலில் உள்ளவர்களுக்கு பொறுப்புகள் வாய்ந்த பதவிகள் கிடைக்கும். கலைத்துறையினருக்கு நண்பர்கள் அனுகூலம் கிடைக்கும். மாணவர்களுக்கு எதையும் அவசரமாகச் செய்யாமல் யோசித்துச் செயற்படுவது நல்லது.

## கும்பம்

எடுத்த காரியத்தை எத்தனை குறுக்கீடுகள் வந்தாலும் அதைச் சமாளித்து செய்து முடிக்கும் திறன் உடைய கும்பராசியினரே, இந்த மாதம் கௌரவப் பிரச்சினை உண்டாகும். நீங்கள் நல்லதாகப் பேசினாலும் எதிரில் உள்ளவர்கள் அதைத் தவறான கண்ணோட்டத்துடனேயே பார்ப்பார்கள். மற்றவர்களின் செயல்களால் மன அமைதி கெடவும் வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் மனைவி, குழந்தைகளுடன் மனஸ்தாபம் ஏற்பட்டு நீங்கும். உறவினர்கள் ,நண்பர்கள் உதவ முன்வந்தாலும் உதவி தாமதமாகவே கிடைக்கும். அரசியல்வாதிகள், கட்சியின் மேலிடத்தில், கணிசமான ஆதரவைப் பெறுவீர்கள். கலைத்துறையினருக்கு அனைத்து வேலைகளும் சுமுகமாக முடியும்.

## மிதுனம்

எதையும் திட்டவட்டமாக பேசி காரியங்களில் குழப்பம் இல்லாமல் வெற்றிகரமாக செய்து முடிக்கும் ஆற்றலை உடைய மிதுன ராசியினரே , இந்த மாதம் எதையும் ஆராய்ந்து பார்த்த பிறகே அதைச் செய்ய முற்படுவீர்கள். தொட்ட காரியம் வெற்றியில் முடிந்தாலும் கடுமையான முயற்சிகள் தேவைப்படும். பணவரத்து கூடும். தொழில், வியாபாரம் மிகவும் சிறப்பாக நடைபெறும். குடும்பத்தில் வாக்குவாதங்கள் உண்டாகலாம். வாழ்க்கை துணையையும் குழந்தைகளிடமும் அனுசரித்து செல்வது நல்லது. கலைத்துறையில் உள்ளவர்களுக்கு நன்மை பயக்கும் மாதமிது. மாணவர்களுக்கு எதிர்காலம் பற்றிய திட்டங்கள் மனதில் தோன்றும்.

## கன்னி

கலகலப்பாக பேசி பழகாமல் ஒதுங்கி இருப்பதை தவிர்த்து அனைவரிடமும் இயல்பாக பேசி வருவது கன்னி ராசியினருக்கு வெற்றிக்கு வழிவகுக்கும். இந்த மாதம் மற்றவர்களின் ஆதரவு கிடைக்க செய்யும். புத்தி சாதுரியத்தைப் பயன்படுத்தி காரியங்களை வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள். உடல் ஆரோக்கியத்திலும் கவனம் தேவை. தொழில் வியாபாரம் தொடர்பாக அலைச்சல் உண்டாகும். குடும்பத்தில் சுமுகமான சூழ்நிலை காணப்படும். கலைத்துறையினருக்கு நற்பெயரும் கீர்த்தியும் வந்து சேரும். அரசியல்வாதிகளுக்கு பணவரவு உண்டாகும். பெற்றோர், ஆசிரியர் கூறியபடி செயற்படுவது மாணவர்கள் கல்வியில் வெற்றி பெற உதவும்.

## தனுசு

அடக்கமான சுபாவம் உடைய தனுசு ராசியினரே, நீங்கள் தன்மையாக எல்லோரிடமும் பழகக் கூடியவர்கள். இந்த மாதம் செலவு கூடும். வாகனங்களால் செலவு உண்டாகும். மனதில் வீண் குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் இழுபறியான நிலை காணப்படும். வீண் அலைச்சல் எதிர்பாராத செலவும் உண்டாகும். குடும்பத்தில் ஏதாவது ஒரு விஷயம் தொடர்பாக வாக்குவாதம் ஏற்படும். கணவன், மனைவி அனுசரித்துச் செல்வது நல்லது. கலைத்துறையினருக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும். அரசியலில் உள்ளவர்களுக்கு பொறுப்புகள் மாறும். மாணவர்கள் கவனத் தடுமாற்றம் இல்லாமல் பாடங்களை படிப்பது நன்மை தரும்.

## மீனம்

எதை செய்தாலும் தன்னம்பிக்கையை கொண்டு சொந்த முயற்சியிலேயே செய்து வெற்றி பெறும் மீன ராசியினரே, இந்த மாதம் பணவரத்து அதிகரிக்கும். அறிவுத் திறமை வெளிப்படும். உங்கள் வார்த்தைக்கு மதிப்பு உண்டாகும். தொழில், வியாபாரம் தொடர்பான அலைச்சல் இருக்கும். குடும்பத்தில் வாக்குவாதத்தையும், கோபத்தையும் தவிர்ப்பது நல்லது. அரசியல்வாதிகள், மேலிடத்தின் ஆதரவை பெறுவீர்கள். கலைத்துறையினருக்கு புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். மாணவர்கள் மற்றவர்களை அனுசரித்து செல்வது நன்மை தரும். விளையாட்டு மற்றும் கல்வியிலும் கூடுதல் கவனம் நன்மை தரும்.

ஊழிக்காலம்-2
36



# புயலுக்குப்பின்...



எந்த அவகாசமும் இல்லை. அவள் அழுக்கடைந்திருந்தாள். குளிப்பதற்கும் நேரமில்லை. பார்வதி அயலில் இருந்த குடிசைகளுக்குச் சென்று, “பிள்ளையள் லீடரை ரீ.ஐ.டீ.க்காரர் கொண்டு போகப்போகினம் போல, போய் ஏதும் உதவி செய்யுங்க.” என்றாள். அதற்குள் தகவல் இரண்டாம்பிரிவில் நின்ற தலைவிக்கும் தெரிந்தது.

வெகு விரைவாக முகாம் முழுதும் கதை பரவியது. ஆனால் நான்கைந்து பேர் மட்டுமே அவளுக்கு உதவி செய்து வழியனுப்ப போனார்கள். ஏனையோர் எட்டநின்று பார்த்துக் கொண்டிருந்தனர்.

வீதியில் நின்ற ராணுவத்தினர் ”கெதியா... கெதியா” என உரப்பிக் கொண்டே நின்றனர். அவள் தன்னை சாவகாசமா அலங்கரித்துக் கொண்டாள். உடைமைகளை ஒரு பையில் போட்டு எடுத்துக் கொண்டாள். இருவர் அவளது கைப்பைகளை தாங்கிச் செல்ல ஒரு மகாராணிபோல நடந்து போனாள். அரை மணிநேரத்தில் எல்லாப் பதிவுகளும் முடிந்து அவளை ஏற்றிக் கொண்டு வாகனம் பறந்தது.

வாகனம் அப்பால் சென்ற சிறிது நேரத்துக்கெல்லாம் பெண்கள் கூட்டம் கூட்டமாக நின்று அவளைப்பற்றி நல்லதும் பொல்லாததுமாக பேசிக் கொண்டிருந்தனர். சிலர் பார்வதியின் குடிலுக்கும் வந்தனர்.

“அம்மம்மா, விசயம் தெரியுமா? அம்மையாரைக் கொண்டு போயிற்றாங்கள்.?”என்றாள் மீனா.

“ஒரு ஸ்ரோர் காணாது, ரெண்டு ஸ்ரோர் வேணுமெண்டா இப்ப தன்ர ஸ்ரோரையும் விட்டிட்டுப்போறா” என்றாள் இன்னொருத்தி.

“ச்சீ !அப்பிடிக் கதைக்கக்கூடாது. ஏல்லாரும் இஞ்ச சரணடைஞ்ச ஆக்கள் தான். ஒருவரையொருவர் ஏற்றித் தாழ்த்தி பேசக்கூடாது. “ என்றாள் பார்வதி.

“சும்மா போங்கோ அம்மம்மா... உங்களை அதுக்கால வெளிக்கிடுத்திறதுக்கு எவ்வளவு பாடுபட்டா இப்ப அவா இந்த இடத்திலயே இல்லை”

“அப்பிடி கணக்குப் பாக்காதையுங்கோ. சொல்லப்போனா அவா எனக்கு நன்மைதான் செய்திருக்கிறா. இப்ப பாருங்கோ, ஆச்சிரமம் மாதிரி தனி வீடு எவ்வளவு சுத்தமா இருக்கு .முதல் அந்த கருவாட்டுமண்டிக்கதானே கிடந்தன். நான் நன்றிதான் சொல்லுவன்” என்றாள் பார்வதி.

பழைய லீடர் தற்காலிகமாகக் கடமையேற்றாலும், மாலையில் அனைத்து முகாம்களின்அடிப்படைப்பயிற்சிமுகாம் பொறுப்பாளராக இனிமையானவள், அமைதியானவள், இப்போது சற்றே பருமனாகியிருந்தவளுமான பெண்ணை முகாம் பொறுப்பதிகாரி தெரிவு செய்தான். அவளது ஸ்மார்ட்டான தோற்றத்தை வைத்தே இதைச் செய்தான். கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

ஒவ்வொரு நாளும் புத்தம் புது நாளாக வருமா? என்ற முகாமின் முக்கியமான எதிர்பார்ப்பு அன்றும் இருந்தது. ஆனால் அன்று விடுதலை செய்யப்போவதாகக் கூறி கொண்டு செல்லப்பட்ட ஊனமுற்ற போராளிகள் திரும்பக் கொண்டு வந்து விடப்பட்டனர். அப்படி கொண்டு வந்தவர்களை பழையபடி இருந்தவர்களுடன் கலக்க விடவில்லை. அவர்கள் பின்புறமிருந்த கொட்டில்களில் பிரித்து விடப் பட்டனர். விபரங்களையும் தகவல் களையும் தவறாகத் தந்து விட்டனர் என்றே ஒரு இராணுவ அதிகாரி தமது சகாக்களிடம் சொன்னான். அதை பார்வதியும் கேட்க நேர்ந்தது. இதற்கு முன்னிருந்த வீடுகளில் அவர்கள் விடப்படவில்லை என்பதுடன், இதற்கு முன்பிருந்த முகாமிலும் விடப்படவில்லை.

காலையிலிருந்து வழமைபோல இயங்கிய முகாம், மத்தியானம் ஒரு மணிக்கு கலகலத்தது. காரணம் ரீ. ஐ. டீக்காரர் வாகனத்துடன் வந்திருந்தனர். இன்றைக்கு யார் யாரோ என்ற ஏக்கம் எல்லோருக்கும் இருந்தது. ஆனால் அவர்கள் , இடையிலிருந்த காணிக்குள் அனைவரையும் செல்லுமாறு பணித்தனர். இரண்டு ‘புளொக்குகளிலிருந்தும்’ பிள்ளைகள் ஒன்று கூடினர். அனைவரையும் நிரையாக நிற்கும்படி கூறவே, எல்லோரும் வழமையான நிரைக்கு வந்தனர். இப்போது ஒருவன் “நீங்க இதுக்கு முன்னம் எப்பிடி விபரம் குடுத்தீங்களோ அப்பிடியே குடுங்க மாற வேண்டாம்” என்றான்.

அடுத்தவன், ’மாலதி படையணி எல்லாம் அந்த மரத்தடியில லைனாகுங்க’ என்றான். ஏராளமான பிள்ளைகள் இருதரப்பிலிருந்தும் எழுந்து போனார்கள்.

“சோதியா படையணி இங்கால” பிள்ளைகள் எழுந்து காட்டப்பட்ட இடத்துக்குப் போனார்கள்.

“குட்டிசிறி” அதற்குரியவர்கள் போனார்கள்..

“கணனிப்பிரிவு” அவர்களும் எழுந்து போனார்கள்.

“கடல் புலி”

“சிறுத்தை”

“அரசியற்றுறை”

“புலனாய்வுத்துறை”

“மருத்துவப்பிரிவு”

“வரைபடப்பிரிவு”

“தலைமைச் செயலகம்”

“காவற்றுறை” இப்போது இன்னும் சிலர் மீதமிருந்தனர். அவர்கள் படையணி பிரிக்கப்படாத காலத்தில் வந்து, பிரிக்கப்படுவதற்கு முன்பே விலகியவர்கள்.

துணைப்படை, அன்பரசி படையணி போன்றவைகளில் சிலர். நாற்பது வயதுக்கு மேற்பட்டோர் தனித்து பதியப்பட்டனர். பார்வதி இவர்கள் அனைவரிலும் வயது கூடியவள். அவளைத் தனியே அழைத்த அதிகாரி அவளிடம், “நீங்க என்ன செய்தீங்க?” என்று கேட்டான் . அவள் செய்ததை சொன்னாள். பத்திரிகைகளில் அவர்களைப்பற்றி வரும் தவறான செய்திகளைப்பற்றி கேட்டான்.

“அம்மா, பி.பி.சி.யில நாங்க இங்க உள்ள பிள்ளைகளைகொண்டு போய் ரேப்பண்ணுறதா சொன்னாங்க” என்றான். பார்வதி, “ ஏன் ஐ.பி.சி., வெரித்தாஸை விட்டிட்டீங்க “ என்றாள்.

‘வெரித்தாஸ் வானொலியின் பணிப்பாளராக ஒரு மதிப்பிற்குரிய மனிதராக இருந்தவர் ஜெகத் கஸ்பார். அவர் லண்டனிலே ஒரு கூட்டத்திலே பேசியதை ஒரு வானொலி ஒலிபரப்பியது .அதில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பெண்களுக்கு கட்டாய கருக்கலைப்பு செய்யப்படுவதாகப் பேசியிருந்தார். அதை நானும் கேட்டேன்’என்றாள்.

“இப்போதே இவர்களுக்கு வயது நாற்பதை கடந்துவிட்டது. இந்த நிலையில் இப்படிப்பட்ட கதை ஊருக்குள் போனால், இவர்களை நியாயமாக யார் திருமணம் செய்வார்கள்? இந்த முகாமிலிருந்து வந்தவள் என்று தெரிந்தால், கொஞ்சமாகவா சீதனம் கேட்பார்கள். ஏழைப்பெற்றோர் என்ன செய்யமுடியும்?’பார்வதி தனக்குள் நொந்து கொண்டாள்.

அந்த அதிகாரி என்ன புரிந்து கொண்டானோ ,” அம்மா இதால பாதிக்கப் படப்போறது இந்த பிள்ளைகள்தான். இதெல்லாம் மீடியாக்காரர் அதாவது தமிழ் மீடியாக்கள் தானே செய்யிது. இதால நாங்க பாதிக்கப்படுறமா இல்லையே” என்றான்.

“சரியான கருத்துத்தான்.ஆனால் இதை நாங்கள் எழுதினாலோ பேசினாலோ கேட்பவர் யார்?”

“இதெல்லாம் எழுதுங்கம்மா” என்றவன் யோசித்தான். இங்கு வந்து பல மாதங்களாகிறது பார்வதியிடம் பலர் எழுதும்படி கூறியிருந்தார்கள். ஆனால் அவற்றை எப்படி வெளியே கொண்டு வருவது என்பதில்தான் பிரச்சினை இருந்தது. சாதாரணமாக கடிதம் எழுதுவதிலேயே இங்கு பிரச்சினை தீரவில்லை. பார்வதி அமைதியாக தான் அமர வேண்டிய இடத்தில் அமர்ந்தாள்.

ஒட்டுமொத்தக் கணக்கை ஒருவர் சரிபார்க்க, தனித்தனி சிலரது பெயர் களை ஒருவர் சரிபார்க்க, இவர்களது வேலை சரியாக நடக்கிறதா என ஒருவர் சரிபார்க்க, ஒரு பத்துப்பேர்வரை வந்து வேகமாகச் செயற்பட்டு, எல்லாவற்றையும் சரி பார்த்துவிட்டுக் கிளம்பிப் போனார்கள். எவரையும் அழைத்துச் செல்லவில்லை.

அவர்கள் அப்பால் போனதும் “உன்னட்ட என்ன கேட்டது?

“உன்னோட என்ன கனநேரம் கதைச்சது.? ஆற்ற ஆற்ற பேர் விசாரிச்சது?” என்பது போன்ற எம்மவரின் தனிப்பட்ட விசாரணைகள் நடந்தேறின. திரும்பவும் அவரவர் இடங்களுக்கு வந்தனர். மாலை வரை பேச கதையிருந்தது. அருமந்த திரைப்படம் இருந்தும் அதைப் பார்க்க கிடைக்கவில்லையே என்ற கவலை பலருக்கிருந்தது.

மறுபடி முகாமின் சனத்தொகை கூடிவிட்டதால். உணவுத் தயாரிப்பு, குளிப்பு, தண்ணீர் லைன், என எல்லாமே பெரும் நெருக்கடிக்குள் வந்தது. இயலாதோர் அனைவரும் பிரித்து விடப்பட்டு விட்டனர். அவர்களில் அநேகர் காலிழந்தோர் அல்லது கையிழந்தோர் என இருந்ததால், தத்தித்தத்தி லைனுக்கு வரவும் தண்ணீருக்கு வரவும் மிகுந்த சிரமப்பட்டனர்.எனவே மற்றப்பிள்ளைகள் கட்டுப்பாட்டை தவிர்த்து உதவிக் கொண்டிருந்தனர்.

(இன்னும் வரும்)


NS Systems
SECURITY
1300 108 555
REALTIME
SECURITY SYSTEM
PROTECTION
IP / HD CCTV Systems
Alarm Monitoring
Access Control
Video Intercom
Security Fog System
Smart Home
Data & Tele-communication
Ducted Vacuum
Solar CCTV
Digital TV Antenna
Security Alarm
UTECH SOLUTIONS
Corporate Group
Protect your Home & Family, Secure your Premises & Business.
1300 108 555 / 0447 533 555
www.nssystems.com.au / info@nssystems.com.au

Transco CARGO




# ஒவ்வொரு வாரமும் இலங்கைக்கு ஏற்றுமதி செய்யும் ஒரே நிறுவனம்

## Christmas Shipping Schecdule

| CUT OFF | | EST ARIVAL IN SL | CUT OFF | | EST ARIVAL IN SL |
|---|---|---|---|---|---|
| August | 06 | Sep 13 | August | 20 | Sep 27 |
| August | 13 | Sep 20 * | August | 27 | Oct 04 |
| September | 03 | Oct 11 | September | 17 | Oct 25 |
| September | 10 | Oct 18 * | September | 24 | Nov 01 |
| October | 01 | Nov 08 | October | 22 | Nov 29 * |
| October | 08 | Nov 15 * | October | 29 | Dec 06 * |
| October | 15 | Nov 22 | | | |
| November | 05 | Dec 13 | November | 19 | Dec 26 |
| November | 12 | Dec 20 * | November | 26 | Jan 03 * |
| December | 03 | Jan 10 | December | 17 | Jan 24 |
| December | 10 | Jan 17 * | | | |
| 2022 | | | | | |
| January | 07 | Feb 14 | January | 21 | Feb 28 |
| January | 14 | Feb 21 * | January | 28 | Mar 07 * |

* Only at Campbellfield & Dandenong South Transco Offices

WE ARE DOING BUSINESS AS USUAL



Shop online in Australia
have it delivered to Sri Lanka
Transco Shopping
transcoshopping.lk

45 Adrian Rd, CAMPBELLFIELD - (03) 9357 7228
206-208 Discovery Road, DANDENONG SOUTH - (03) 9703 2255

follow us on

We love to deliver

SYDNEY - 02 9897 0004 | BRISBANE - 07 3219 0203 | ADELAIDE - 08 8322 8825 | PERTH - 08 9452 7707 | CANBERRA - 02 62821905 | DARWIN - 08 79790002 | TASMANIA - 03 90174167

1300 1 TRANSCO (1300 187 267) | WWW.TRANSCOCARGO.COM.AU